# இயேசு அழைக்கிறார்

YESU AZHAIKIRAR - TAMIL MONTHLY - JULY 2025
VOL. 23 ISSUE 4 - 28 PAGES - Rs. 21/-

ஜூலை 2025

## உள்ளே...

தேவன், தேவைகள் எல்லாவற்றையும் அருளிச்செய்வார்
Dr. பால் தினகரன்

தேவனுடைய இரக்கமுள்ள இருதயம்

கிறிஸ்தவ இளைஞர் அரசியலில் ஈடுபட முடியுமா?

தேவ மகிமைக்காக ஜொலிக்கும்
இயேசு அழைக்கிறார் இளம் பங்காளர்கள்



**என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி**
**உங்கள் குறைவையெல்லாம்**
**கிறிஸ்து இயேசுவுக்குள்**
**மகிமையிலே நிறைவாக்குவார்**
(பிலிப்பியர் 4:19)




இந்த ஆண்டு நாடு முழுவதும் 15,000க்கும் மேற்பட்ட சிறுபிள்ளைகள் டைனமிக் சிறுவர் முகாமில் கலந்துகொண்டனர். ஆகவே, கடந்த ஆண்டைக் காட்டிலும் வெற்றிகரமாக நடந்தது. கலந்துகொண்ட பிள்ளைகள் ஆண்டவர் இயேசுவின் அன்பை ருசித்தனர். 2 தீமோத்தேயு 2:21 வசனத்தின்படி 'கனத்துக்குரிய பாத்திரம்' என்றால் என்ன என்று கற்றுக் கொள்ளும்போது, அவர்கள் முகங்கள் பிரகாசித்தன. கதைகள், பாடல்கள், கலை செயல்பாடுகள், ஜெப வேளைகள் மூலம் சிறுபிள்ளைகள் தாங்கள் எப்படி சுத்திகரிக்கப்பட முடியும், எப்படி வேறு பிரிக்கப்பட முடியும், எப்படி தேவனுடைய விசேஷித்த நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட முடியும் என்பதை கண்டுகொண்டனர்.

தியாகமாக கொடுத்த உங்களைப் போன்ற பங்காளர்களுக்கு நன்றி. சிறுபிள்ளைகள் வேதாகம சத்தியங்களை மாத்திரம் கற்றுக்கொள்ளவில்லை; ஆண்டவரின் சமுகத்தில் சந்தோஷமாகவும் இருந்தனர். அநேக பிள்ளைகள்

# இயேசுவின் அன்பை அனுபவித்த சிறுபிள்ளைகள்



தங்கள் இருதயங்களை இயேசுவுக்குக் கொடுத்தனர்; அவருடைய அன்பினாலும் அபிஷேகத்தினாலும் நிரம்பியவர்களாக வீடு திரும்பினர். "சிறு பிள்ளைகளில் ஒன்றை என் நாமத்தினாலே ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை ஏற்றுக்கொள்ளுகிறான்" (மாற்கு 9:37) என்ற வசனத்தின்படி, நீங்கள் இந்தக் குழந்தைகளை இயேசுவின் நாமத்தில் வரவேற்றிருக்கிறீர்கள்; ஆகவே, ஆண்டவர் அளிக்கும் பலன் பெரிதாயிருக்கும். அவர்தாம் உங்கள் வீட்டை அதிகமாய் ஆசீர்வதித்து, உங்களுக்கு ஒன்றும் குறைவுபடாமல் பார்த்துக்கொள்வார்.

இந்த முகாம் இந்தியா முழுவதும் 6 நாட்கள் 97 இயேசு அழைக்கிறார் ஜெப கோபுரங்களில் தமிழ், ஆங்கிலம், ஹிந்தி, தெலுங்கு மற்றும் மலையாளம் ஆகிய ஐந்து மொழிகளில் 13 மண்டலங்களில் நடந்தன. 6 முதல் 15 வயது வரையுள்ள சிறுபிள்ளைகள் Beginner, Primary, Junior, Intermediate ஆகிய ஐந்து பிரிவுகளாக பிரிக்கப்பட்டனர். ஒவ்வொரு பிரிவினருக்கும் 'கனத்துக்குரிய பாத்திரம்' ஆகும்படி செம்பொருள் சார்ந்த பாடங்கள் நடத்தப்பட்டன.

**தினசரி பாடவேளைகள்:**

- செம்பொருள் பாடல் மற்றும் ஆராதனை
- வேதாகம பாடங்கள் மற்றும் உவமைகள்
- கலைவேலைகள், உரையாடல்கள்
- மனப்பாட வசனங்கள் மற்றும் வேதாகம வினாக்கள்
- தனி மற்றும் குழு ஜெபவேளைகள்

இந்தப் பாடவேளைகள் மூலம் பரிசுத்தமாக வாழ்வதற்கு, தேவனுடைய வார்த்தையால் நிறைந்திருப்பதற்கு, அவரால் பயன்படுத்தப்படுவதற்கு பிள்ளைகள் கற்றுக் கொண்டனர். உடைந்துபோன மற்றும் வெறுமையான பாத்திரங்களும் தேவனுடைய கரங்களில் கனமானதாக மாற்றப்படலாம் என்பதை புரிந்துகொண்டனர்.




## சிறுபிள்ளைகளின் சில சாட்சிகள்:



பிம்ப்ரியில் அமைந்துள்ள இயேசு அழைக்கிறார் ஜெப கோபுரத்தில் DKCயில் கலந்துகொண்டேன். ஆசிரியர்கள் என்னை அன்போடு வரவேற்று பல கதைகளை கூறினார்கள்; தேவனுடைய கரங்களில் கனமான பாத்திரமாக விளங்குவது எப்படி என்று கற்றுக்கொடுத்தனர். நான் தினமும் புதிய பாடல்களை, அநேக நல்ல காரியங்களை கற்றுக்கொண்டேன். ஆசிரியர்கள் மிகவும் அன்பாக இருந்தனர்; நான் ஒவ்வொரு தருணத்தையும் மகிழ்ச்சியோடு அனுபவித்தேன். இயேசு அழைக்கிறார் ஊழியத்திற்கு நன்றி.

- **வர்ஷாலி பௌடி**, பிம்ப்ரி.



ஹுப்ளியில் நடைபெற்ற DKCயில் நான் பங்குபெற்றேன். நான் தெரிந்துகொள்ளப்பட்ட பாத்திரம், நிரப்பப்பட்ட பாத்திரம், கனமுள்ள பாத்திரம், வெறுமையான பாத்திரம், விலையேறப்பெற்ற பாத்திரம், உடைந்துபோன பாத்திரம் என்ற ஆறுவிதமான பாத்திரங்களை குறித்துக் கற்றுக்கொண்டேன். தேவன் எல்லா பாத்திரங்களையும் எப்படி பயன்படுத்துவார் என்பதை புரிந்துகொள்ளலாம்; அவர் தம் பிள்ளைகள் அனைவரும் தம்மால் வல்லமையாக பயன்படுத்தப்படவேண்டும் என்று விரும்புகிறார். இதுபோன்ற ஆழமான சத்தியங்களை கற்றுக்கொள்ள வாய்ப்பு கொடுத்த இயேசு அழைக்கிறாருக்கு நன்றி.

- **ஏஞ்சல்**, ஹுப்ளி.



தேவனால் பயன்படுத்தப்பட்டவர்களைக் குறித்து அநேக கதைகளைக் கற்றுக்கொண்டேன். DKCயில் கலந்துகொண்டது எனக்கு பெரிய ஆசீர்வாதம். அவர்கள் கற்றுக்கொடுத்த புதிய பாடல்களும் விளையாட்டுகளும் மகிழ்ச்சியை அளித்தன.

- **ஸ்ரேயா**, ஹுப்ளி



நாம் தேவனுக்குக் கீழ்ப்படிந்தாலும், அவருக்கு செவிகொடுத்தாலும் மட்டுமே அவரால் பயன்படுத்தப்பட முடியும் என்று கற்றுக்கொண்டேன். அவரால் பயன்படுத்தப்படும்படி, பரிசுத்தமான வாழ்க்கை நடத்துவதன் முக்கியத்துவத்தை புரிந்துகொண்டேன்.

- **தனுஷ்**, ஹுப்ளி.



இந்த ஆண்டு DKCயில் தேவனால் வெவ்வேறு நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்ட நோவா, சாமுவேல் மற்றும் அநேகரைக் குறித்துக் கற்றுக்கொண்டேன். பாடவேளைகள் ஆர்வமூட்டுகிறவையாக இருந்தன; இயேசுவைக் குறித்து அதிகம் அறிந்துகொள்ள உதவின.

- **ஸ்ட்ரூஸ்டி**, ஹுப்ளி.

பிள்ளைகள், தேவனுடைய ராஜ்ஜியத்தில் கனத்துக்குரிய பாத்திரங்களாக விளங்கும்படி தேவ சமுகத்தில் கற்றுக்கொண்ட 2025 டைனமிக் சிறுவர் முகாம் பரலோக அனுபவத்தை பூமியில் கொடுத்தது. இந்த வாழ்க்கையை மாற்றும் அனுபவத்தை கொடுப்பதை எங்களோடு இணைந்து சாத்தியமாக்கியதற்காக உங்களுக்கு நன்றி.



















# தேவன்
## தேவைகள் எல்லாவற்றையும்
## அருளிச்செய்வார்

அன்பானவர்களே, இந்த மாதத்திலும்,

**“என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார்” (பிலிப்பியர் 4:19)**

என்பது தேவனிடத்திலிருந்து உங்களுக்கு வாக்குத்தத்தமாக வருகிறது.

எவ்வளவு ஆறுதலான நிச்சயத்தை இது தருகிறது! நாம் உதாரத்துவமாக, உண்மையாக கொடுக்கும் தேவனை சேவிக்கிறோம். “**நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி, சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கி வருகிறது**” என்று யாக்கோபு 1:17 நினைவுப்படுத்துகிறது. அவர் கிருபையாக, உதாரத்துவமாக கொடுக்கிறவராக இருக்கிறார். அவர் எந்த நன்மையையும் தம் பிள்ளைகளுக்கு கொடுக்காமல் இருக்க மாட்டார். மத்தேயு 7:11ல், “பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்கு நன்மையானவைகளைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா?” இயேசு தாமே இந்த உண்மையைச் சொல்லுகிறார். நம்முடைய பரமபிதா நமக்கு நன்மையான ஈவுகளை, உலகப்பிரகாரமான ஆசீர்வாதங்களை மட்டுமல்ல, எல்லாவற்றையும்விட பெரிய ஈவான பரிசுத்த ஆவியைக் கொடுக்க விரும்புகிறார்.

யோவான் 3:34, இயேசு பரிசுத்த ஆவியினால் அளவில்லாமல் நிரம்பி இருந்தார் என்று சொல்லுகிறது. அதே பரிசுத்த ஆவியானவர் இன்றைக்கு நமக்கும் கிடைப்பார். “**பரம பிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக் கொள்ளுகிறவர்களுக்குப் பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா**” (லூக்கா 11:13) என்று கூறுகிறது. நாம் அவர் பேரில் தாகமாக இருக்கும்போது, “வந்து பருகுங்கள்; ஜீவத்தண்ணீருள்ள நதிகளண்டை தாகம் தீர்த்துக்கொள்ளுங்கள்” என்று இயேசு நம்மை அழைப்பார் (யோவான் 7.37-39).

என் வாழ்க்கையில் பரிசுத்த ஆவியானவரை நான் பெற்ற நாள் எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. அது 1980-ம் ஆண்டு. எனக்கு 18 வயது தான் ஆகியிருந்தது. நான் இயேசுவிடம் பரிசுத்தமாக வாழ்வதற்கு எனக்கு பலன் இல்லை என்று அறிக்கையிட்டேன். ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவிசெய்கிறார் (ரோமர் 8:26) என்ற



Dr. பால் தினகரன் - *paul@jesuscalls.org*

*Pauldhinakaranofficial*

வசனம் எனக்கு நம்பிக்கையைக் கொடுத்தது. அன்று இரவு நான் ஊக்கமாக ஜெபித்தேன். விடியற்காலத்தில் கர்த்தருடைய சந்தோஷம் என் இருதயத்தை நிரப்பியது. நான் கண்ணீர்விட்டு அழுதேன்; நடுங்கினேன்; சொல்ல முடியாத சந்தோஷத்தினால் நிறைந்தேன். நான் ஜெபிப்பதற்காக முழங்கால்படியிட்டபோது, பரிசுத்த ஆவியானவர் என்மேல் வந்து, எனக்கு நவமான பாஷைகளை, ஒரு தெய்வீக பாஷையை, மற்றவர்களுக்காக மன்றாடும்படி கொடுத்தார் (ரோமர் 8.26). அவர் என்னுடைய இருதயத்தை சுத்தப்படுத்தி, அதை ஜீவனுள்ள தேவனுடைய ஆலயமாக மாற்றினார். அன்றிலிருந்து பரிசுத்த ஆவியானவர் எனக்கு நெருங்கிய துணையாளராக இருக்கிறார். அவர் என்னிடம், ''பால், இதுவரைக்கும் உனக்கு உலகப் பிரகாரமான ஏராளமான நண்பர்கள் இருந்தார்கள். ஆனால், இப்போதிருந்து நானே உனக்கு ஒரே நண்பனாக இருப்பேன். நான் உனக்காக யாவற்றையும் செய்து முடிப்பேன்'' என்று கூறினார். கடந்த 45 ஆண்டுகள் அவர் உண்மையாக என்னோடு நடக்கிறார். என்னுடைய வாழ்க்கையை சமாதானத்தினால், வல்லமையினால், ஒரு நோக்கத்தினால் நிறைத்திருக்கிறார்.

இன்று அதே பரிசுத்த ஆவியானவர் அளவின்றி உங்களையும் நிரப்ப ஆயத்தமாக இருக்கிறார். தேவன் நம்முடைய சரீரப்பிரகாரமான தேவைகளை மாத்திரம் கொடுப்பவர் அல்ல. அவர் நமக்கு ஜீவனையும் கொடுக்கிறார். ''**நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்**'' (யோவான் 11:25) என்று வேதம் கூறுகிறது. நீங்கள் பாவத்திற்கு மரித்தவர்களாக உணர்ந்தாலும், இயேசு உங்களை மறுபடியும் எழுப்பி, நீதியினால், சந்தோஷத்தினால், பரிசுத்தத்தினால் நிறைந்த புதிய வாழ்க்கையைத் தர வல்லவராக இருக்கிறார்.

"உன் பொருளாலும், உன் எல்லா விளைவின் முதற்பலனாலும் கர்த்தரைக் கனம்பண்ணு. அப்பொழுது உன் களஞ்சியங்கள் பூரணமாய் நிரம்பும்"

யோவான் 10:10, ''**நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன்**'' என்று கூறுகிறது. தேவன் அவரது பிரசன்னத்தினாலும் நோக்கத்தினாலும் நிறைந்திருந்த ஜீவனை, பரிபூரணத்தைத் தருகிறார். அவர் உங்களோடு இருக்கும்போது உலகத்தில் ஒன்றும் உங்களை அழிக்க முடியாது. ஆகவே, அன்பானவர்களே, உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக. உங்கள் தேவைகளை அருளிச்செய்கிறவர் மேல், ஜீவனையும் பரிபூரணத்தையும் கொடுக்கிறவர் மேல் நம்பிக்கை வையுங்கள்.

## தேவன் அருளிச்செய்வதை நாம் எப்படி பெற்றுக்கொள்ள முடியும்?

கொடுப்பதே அதன் ரகசியம்.

இயேசு, ''**கொடுங்கள், அப்பொழுது உங்களுக்கும் கொடுக்கப்படும்; அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து, உங்கள் மடியிலே போடுவார்கள்; நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்களோ அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படும்**'' (லூக்கா 6:38) என்று கூறியிருக்கிறார். உங்கள் தேவைகளின் மத்தியிலும் கொடுங்கள்.

> **''என் ஆலயத்தில் ஆகாரம் உண்டாயிருக்கும்படித் தசமபாகங்களையெல்லாம் பண்டசாலையிலே கொண்டு வாருங்கள்; அப்பொழுது நான் வானத்தின் பலகணிகளைத் திறந்து, இடங்கொள்ளாமற்போகுமட்டும் உங்கள்மேல் ஆசீர்வாதத்தை வருஷிக்கமாட்டேனோ வென்று அதினால் என்னைச் சோதித்துப் பாருங்கள்''**
>
> **(மல்கியா 3:10)**

தசமபாகம் என்பது என்ன? உங்கள் வருமானத்தில் பத்து சதவீதத்தை தேவனுக்கென்று கொடுப்பதுதான் தசமபாகம் ஆகும். இந்த விசுவாச செயல்பாடு பரலோகத்தின் கதவுகளைத் திறக்கும். நீதிமொழிகள் 3:9,10, ''உன் பொருளாலும், உன் எல்லா விளைவின் முதற்பலனாலும் கர்த்தரைக் கனம்பண்ணு. அப்போது உன் களஞ்சியங்கள் பூரணமாய் நிரம்பும்'' என்று கூறுகிறது.

## நீங்கள் யாருக்கு கொடுக்க வேண்டும்?

### தேவனுடைய ஊழியத்திற்கு கொடுங்கள்

நாம் நமது காணிக்கையை நேரடியாக தேவனுக்கு கொடுக்க முடியாது. மாறாக, அதை பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு சுகம் அளிக்கும், இரட்சிப்பை அளிக்கும், ஆறுதலை அளிக்கும் ஊழியங்களுக்கு கொடுக்கலாம். அதுபோன்ற ஊழியங்களுக்கு நீங்கள் கொடுக்கும்போது, நீங்கள் விதைப்பது பன்மடங்காக பெருகி ஏராளமானோரின் வாழ்க்கையைத் தொடும்.

சிலர், ''இந்த ஊழியங்களுக்கு ஏற்கனவே போதுமானது இருக்கிறது'' என்று கூறுவார்கள். ஆனாலும், அவர்கள் விதவை கொடுத்த இரண்டு காசையும், சிறுபையன் கொடுத்த ஐந்து அப்பங்களையும் கொண்டு ஆண்டவர் அற்புதங்களை செய்தார் என்பதை உணருவதில்லை. ஆண்டவரின் ஆசீர்வாதமே தவிர இவ்வளவு தொகை என்பது பெருக்கத்தை கொண்டு வராது. பேதுரு, தனது படகை இயேசு பிரசங்கிப்பதற்காக கொடுத்தான். அவர் அதை நிரப்பினார். இன்னொரு படகையும்கூட மீன்களால் நிரப்பினார் (லூக்கா 5:3-7). கடைசி மாவையும் எண்ணெயையும் கொடுத்த விதவைக்கு தேவன், அவளும் அவள் வீட்டாரும் அநேக நாட்கள் சாப்பிடும்படி அருளிச்செய்தார்.

சென்னையைச் சேர்ந்த சகோதரி ஜெயலதாவின் வல்லமையான சாட்சியை உங்களோடு பகிர்ந்துகொள்கிறேன்.

*அவர்கள் திருமணமாகி ஒன்பது ஆண்டுகள் குழந்தை இல்லாமல் கஷ்டப்பட்டார்கள். மிகுந்த அவமானத்தைச்*

*சந்தித்தார்கள். அவர்களை கை விட்டுவிட்டு இன்னொரு திருமணம் செய்து கொள்ளும்படி அவர்களது கணவரின் வீட்டார் அழுத்தம் கொடுத்தார்கள். அவர்களுடைய இல்லற வாழ்க்கையில் சண்டையே காணப்பட்டது. தாழ்ச்சியான நிலையில் அவர்கள் இயேசு அழைக்கிறார் ஜெப கோபுரத்திற்கு வர ஆரம்பித்தார்கள். ஒரு வெள்ளிக் கிழமை குடும்ப ஆசீர்வாதக் கூட்டத்தில் அவர்கள் கலந்து கொண்டபோது மனதுருக்கத்தோடு ஒரு ஜெப வீரர் அவருக்காக ஜெபித்தார். அவர்கள் குழந்தை பிறப்பதற்கு முன்பாகவே விசுவாசத்தோடு இளம் பங்காளர் திட்டத்தில் சேர்த்தார்கள். (சிறுபிள்ளைகளுக்காக தினமும் 24 மணி நேர ஜெப கோபுரத்தில் ஜெபிக்கிற ஒரு திட்டம். அவர்கள் பெயரை, புகைப்படங்களை ஆண்டவருக்கு முன்பாக வைத்து ஜெபிக்கிற தெய்வீக திட்டம்) தனக்குப் பிறக்கப் போகிற குழந்தையை தைரியமாக அதில் பதிவு பண்ணினார்கள். ஒன்பது ஆண்டு குழந்தை இல்லாத நிலைமையில், 15 நாட்களில் அவர்கள் கருவுற்றார்கள். கர்த்தருடைய சந்தோஷம் அவர்கள் உள்ளத்தை நிரப்பியது. தொடர்ந்து தேவனுடைய ஊழியத்தைத் தாங்க ஆரம்பித்தார்கள். ஆண்டவர் சகோதரி ஜெயலதாவிற்கு ஒரு மகனைக் கொடுத்து, அவர்களது சந்தோஷத்தை பூரணப் படுத்தினார். அந்த ஆசீர்வாதம் அத்துடன் நின்றுவிடவில்லை. அவர்கள் மறுபடியும் கருத்தரித்து ஒரு மகளைப் பெற்றெடுத்தார்கள். வார்த்தைகளால் விவரிக்க முடியாத சந்தோஷத்தை அடைந்தார்கள். அவர்கள் கிறிஸ்துமஸின்போது ஏழைகளுக்கு சீஷாவின் மூலமாக புதிய ஆடைகளை கொடுப்பேன் என்று வாக்குக்கொடுத்தார்கள். இன்று அவர்கள் குடும்பம் பரிபூரண ஆசீர்வாதத்தைப் பெற்றிருக்கிறது. தேவன் அவர்களுக்கு செய்ததை உங்களுக்கும் செய்வார். உங்கள் சந்தோஷம் நிறைவாய் இருக்கும்.*

> “உங்களது ஈகை மற்றொருவருடைய கண்ணீரைத் துடைக்க அவர் பயன்படுத்தட்டும். அதன் பிறகு உங்கள் குறைவுகளை எல்லாம் அவர் மகிமையிலே நிறைவாக்குவதைக் காணுங்கள்”

### தேவனுடைய ஊழியர்களுக்குக் கொடுங்கள்

இரண்டாவதாக, தேவனுடைய ஊழியத்திற்குக் கொடுப்பதோடு, தேவனுடைய ஊழியர்களையும் நாம் கனம்பண்ண வேண்டும்; பராமரிக்க வேண்டும் என்று வேதாகமம் போதிக்கிறது (சங்கீதம் 16:2,3). தாவீதின் ஐசுவரியங்களை தனக்கென வைத்துக்கொள்ளாமல், தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட பரிசுத்தவான்களுக்கு கொடுக்க விரும்பினான்.

பிலிப்பியர் 4:18-ல், பவுல், “**எல்லாம் எனக்குக் கிடைத்தது, பரிபூரணமும் உண்டாயிருக்கிறது; உங்களால் அனுப்பப்பட்டவைகளைச் சுகந்தவாசனையும் தேவனுக்குப் பிரியமான உகந்த பலியுமாக எப்பாப்பிரோதீத்துவின் கையில் வரப்பற்றிக்கொண்டபடியால் நான் திருப்தியடைந்திருக் கிறேன்**” விசுவாசிகளின் உதார குணத்தைக் குறித்து எழுதுகிறார்.

இரவும் பகலும் மக்களுக்காக ஜெபித்து, பிரசங்கித்து, ஊழியம் செய்யும் தேவனுடைய ஊழியர்களை நீங்கள் பராமரிக்கும்போது, தேவன் உங்களுக்கு எல்லாவற்றை யும் தருவார். அவர் உங்களது அன்பை, உங்களது தியாகத்தை, நீங்கள் அளிக்கும் கனத்தைப் பார்க்கிறார். அவர் எல்லாவற்றையும் அமுக்கி, குலுக்கி, சரிந்து விழும்படி திரும்ப தருவார்.

*சென்னையை சேர்ந்த சகோதரர் ராஜ் பால் மோசஸ், அவருடைய தம்பியை இழந்தார்; அவருடைய வேலையையும் இழந்திருந்தார். மிகுந்த மனச்சோர்வு அவரைப் பிடித்தது. அந்த அவநம்பிக்கையின் மத்தியி லும் யாரோ ஒருவர் அவரை இயேசு அழைக்கிறார் ஜெப கோபுரத்திற்கு அழைத்து வந்தார். ஒரு ஜெபவீரர் அவருக்காக ஜெபித்தார். தேவ சமாதானம் அவருக்குக் கிடைத்தது. அவர் இயேசு அழைக்கிறார் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்க்க ஆரம்பித்தார். தன்னுடைய வாழ்க்கையை இயேசுவுக்கு ஒப்புக்கொடுத்தார். ஒரு நாள் என்னுடைய செய்தியை தொலைக்காட்சியில் பார்த்துக் கொண்டிருந்தபோது, ஜெபத்தின் மூலமாக பெறக்கூடிய ஆசீர்வாதங்களை குறித்துப் பேசியதைக் கேட்டு, விசுவாசம் அவருக்குள் எழுந்தது. சீக்கிரமே ஒரு நேர்முக தேர்வுக்கு அழைக்கப் பட்டார். அவர் நான் கூறிய வார்த் தைகளை நினைவுகூர்ந்து, “ஆண்ட வரே, இந்த வேலையை நீர் எனக்கு கொடுத்தால் மற்றவர்கள் ஆசீர்வதிக் கப்படும்படி இயேசு அழைக்கிறார் ஊழியத்திற்குக் கொடுக்கிறேன்” என்று பொருத்தனை பண்ணினார். தேவனுடைய கிருபையினால், அவர் அந்த வேலைக்குத் தெரிந்தெடுக்கப் பட்டார். அந்த நாளிலிருந்து அவரது வாழ்க்கை செழிக்க ஆரம்பித்தது. தேவன் அன்பான மனைவியை, அழகிய மகளையும் கொடுத்தார். பிறகு அவர் இயேசு அழைக்கிறார் ஸ்தானாபதிகள் கூட்டத்தில் கலந்துகொண்டார். ஆண்ட வர் அவரைப் பரிசுத்த ஆவியினால் நிறைத்தார். இன்றைக்கு அவர் இயேசு அழைக்கிறார் ஊழியத்தின் மூலமாக தேவனுக்கு ஊழியம் செய்து வருகிறார். ஆகவே, இன்றைக்கு ஒரு நோக்கத்தோடு இருங்கள். தேவனின் ஊழியர்களின் தேவைகளை சந்தியுங்கள். ஊழியத்தை மட்டுமல்ல; ஊழியத்தின் பின்னால் இருக் கிறவர்களையும் கவனியுங்கள். அப்போது நீங்கள் மனுஷருக்குக் கொடுக்கமாட்டீர்கள். ஆண்டவருக்குக் கொடுப்பீர்கள். அவர் திரும்ப உங்களைச் செழிக்கப் பண்ணுவார்.*

### ஏழைக்குக் கொடுங்கள்

“**பசியுள்ளவனுக்கு உன் ஆகாரத்தைப் பகிர்ந்துகொடுக்கி றதும், துரத்துண்ட சிறுமையானவர்களை வீட்டிலே சேர்த்துக்கொள்ளுகிறதும், வஸ்திரமில்லாதவனைக் கண்டால் அவனுக்கு வஸ்திரங் கொடுக்கிறதும், உன் மாம்சமானவனுக்கு உன்னை ஒளிக்காமலிருக்கிறதும் அல்லவோ எனக்கு உகந்த உபவாசம். அப்பொழுது**

**விடியற்கால வெளுப்பைப்போல உன் வெளிச்சம் எழும்பி, உன் சுகவாழ்வு சீக்கிரத்தில் துளிர்த்து, உன் நீதி உனக்கு முன்னாலே செல்லும்; கர்த்தருடைய மகிமை உன்னைப் பின்னாலே காக்கும்'' (ஏசாயா 58:7,8)** என்று கூறுகிறது.

இயேசு அழைக்கிறார் ஊழியம் சீஷாவின் மூலமாக கணக்கற்ற ஏழை மக்களுக்கு, கஷ்டப்படுகிற ஏழை ஊழியர்களுக்கு உதவி செய்கிறது. அதுபோன்ற ஊழியத் தோடு நீங்கள் நிற்கும்போது உங்கள் வெளிச்சத்தை தேவன் பிரகாசிக்கப்பண்ணுவார். சுகத்தைக் கொண்டு வருவார். அவரது மகிமையால் சூழ்ந்துகொள்வார்.

*லதா பாலன் ஆச்சாரியா என்ற சகோதரியும், அவரது கணவரும் மும்பையில் மிகுந்த பொருளாதார நெருக்கடி யின் மத்தியில் வாழ்ந்து வந்தார்கள். ரூ.7,000/- மட்டுமே அவருக்கு மாத வருமானம். அதனால் அவர்கள் ஒரு பத்துக்குப் பத்து வாடகை வீட்டில் தங்கள் குட்டி மகள் சுஜியுடன் சரியான உணவு, குழந்தைக்குப் பால் எதுவும் இல்லாமல் கிழிந்த ஆடையுடன் இருந்தார்கள். கிழிந்த காலணி அணிந்திருப்பதால் காலில் அவருக்கு காயம் இருந்தது. பள்ளி கட்டணம் கட்டுவதற்குக்கூட அவர்கள் மிகுந்த சிரமப்பட்டார்கள். இருக்கிற கடனை சகோதரி லதாவினுடைய தங்க சங்கிலியை விற்று அடைத்தார் கள். உறவினர்கள் அவர்களை கைவிட்டார்கள். எல்லா நம்பிக்கையும் இழந்துபோனார்கள். ஆனால் ஒரு நாள், காட்கோபரில் உள்ள இயேசு அழைக்கிறார் ஜெப கோபுரத்தைக் குறித்து யாரோ ஒருவர் அவர்களுக்குக் கூறினார்கள். அவர்கள் அங்கு வந்தபோது, தேவ பிரசன்னத்தையும், தகப்பனுடைய வீட்டுக்கு வந்ததைப் போலவும் உணர்ந்தார்கள். ஜெப வீரர்கள் அவர்களை அன்போடு வரவேற்று அவர்களுக்காக ஜெபித்தார்கள். மும்பையில் ஒரு பிரார்த்தனை திருவிழா ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக ஜெப கோபுரத்தில் கூறினார்கள். மிகுந்த விசுவாசத்தோடு அவர்கள் அந்த பிரார்த்தனை திருவிழாவில் கலந்துகொண்டார்கள். அந்த பிரார்த்தனை திருவிழாவில் அந்த சகோதரியால் சில நாணயங்களை மட்டுமே காணிக்கையாகக் கொடுக்க முடிந்தது. மற்றவர் கள் ரூபாய் தாள்களை போட்டனர்; அந்த நாணயங்கள் எழுப்பிய ஒலி, அவர்களை வெட்கத்துக்குள்ளாக்கியது. ஆனால் அந்த நேரம், ''உங்கள் துக்கம் சந்தோஷமாக மாறும்'' என்று நான் கூறுவது அவர்களுக்கு கேட்டது.*

*அன்று இரவு நான் பிரசங்கித்தபோது, விசுவாசம் அவர்கள் உள்ளத்தில் துளிர்த்தது. இயேசுவே இந்த உலகத்தின் ஒளி. அவர் இப்போது வந்து கொண்டிருக் கிறார் என்று கூறினேன். விரைவிலேயே அவர்கள் கணவருக்கு புதிய வேலை மாதம் ரூ.25,000 ஊதியத் தில் கிடைத்தது. அவர்கள் மகளை இளம்பங்காளராக சேர்த்தார்கள். 55% மதிப்பெண்கள் பெற்றுக்கொண்டிருந்த சுஜி, அற்புதவிதமாக 99% மதிப்பெண்கள் பெற்று பட்டம் பெற்றார். அவர்கள் இயேசு அழைக்கிறார் குடும்ப ஆசீர்வாத திட்டத்திலும் இணைந்தார்கள். நான் அவர்க ளுக்கு செப்பனியா 3:19, ''அவர்கள் வெட்கம் அநுபவித்த சகல தேசங்களிலும் அவர்களுக்குப் புகழ்ச்சியும் கீர்த்தியும் உண்டாகச்செய்வேன்'' என்ற வசனத்தை குறிப்பிட்டு அனுப்பினேன். அவர்கள் பெதஸ்தா ஜெப ஊழியத்தையும் தாங்குவதற்கு முடிவு செய்தார்கள். உதாரத்துவமாய் தேவனின் ராஜ்ஜியத்தில் விதைத்தார் கள். பதிலுக்கு தேவன் அவர்களை உயர்த்தினார். அவர்கள் கணவருடைய ஊதியம் மாதம் 77,000 ரூபாயாக உயர்ந்தது. அவர்கள் மும்பையிலேயே சொந்தமாக ஒரு வீடு கட்டினார்கள். இன்று அவர்களை விட்டுச் சென்ற உறவினர்கள் அவர்களை கனப்படுத்து கிறார்கள். தேவன் அவர்களுடைய துக்கத்தை சந்தோஷ மாக மாற்றினார். உங்களுக்கும் அப்படியே செய்வார். உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக. உங்களுக்கு வருமானத்திற்கு ஏற்ப அல்லது சூழ்நிலைக்கு ஏற்ப அருளப்படுவதில்லை.*

**''என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார்'' (பிலிப்பியர் 4:19)**

நீங்கள் அவரை நம்புவீர்களா? அவரது ஊழியத்திற்கு கொடுப்பீர்களா? அவரது ஊழியர்களை கனம்பண்ணு வீர்களா? ஏழைகளை நினைப்பீர்களா? அப்படிச் செய்யும்போது, வானத்தின் பலகணிகள் திறந்து உங்கள் வாழ்க்கையை நிரப்பும்.

**ஜெபம்:**

அன்புள்ள தகப்பனே, உம்முடைய பிள்ளையை இப்போது உம் முன் கொண்டு வருகிறேன். நீர் கொடுத்திருக்கிற இந்த தெய்வீக வாக்குத்தத்தத்தின்படி அவர்களை ஆசீர்வதியும். தாராளமாக கொடுக்கக் கூடிய உம்மை, உண்மையாகவும் விசுவாசத்தோ டும் நம்பும்படியான பலனை அவர்களுக்கு அருளிச் செய்யும். உம்முடைய கிருபை, உம்மை முழுவது மாக நம்புவதற்கு அவர்களைப் பலப்படுத்துவதாக. கீழ்ப்படிதலுக்குரிய பலனை அவர்களுக்கு கொடும். அவர்கள் 100 மடங்கு பலனைப் பெற்றுக்கொள்ளட் டும். இந்த மாதமே இந்த அற்புதம் நடக்கட்டும். அவர் களுக்கு கடன்கள் அடையட்டும்; தேவைகள் சந்திக்கப் படட்டும்; கனவுகள் நிறைவேறட்டும். இயற்கைக்கு அப்பாற்பட்ட மாதமாக இது அமையட்டும். இந்த ஆசீர்வாதத்தை வல்லமையான இயேசு கிறிஸ்து வின் நாமத்தில் ஏறெடுக்கிறேன், ஆமென்.

**24 X 7 ஜெப உதவிக்கு இயேசு அழைக்கிறார் ஜெப கோபுரம்**
**8546 999 000** (அனைத்து மொழிகளிலும்)
மின்னஞ்சல்: paul@jesuscalls.org
ஜெப கோபுரம் தினமும் காலை 8 முதல் இரவு 8 மணி வரை திறந்திருக்கும்.



# தேவ மகிமைக்காக ஜொலிக்கும் இயேசு அழைக்கிறார் இளம் பங்காளர்கள்



## எல்லா பிள்ளைகளுக்கும் ஆசீர்வாதம்

நானும் என் கணவரும் எங்கள் பிள்ளைகள் அனைவரையும் இயேசு அழைக்கிறார் ஊழியத்தில் இளம் பங்காளர்களாக சேர்த்தோம். எங்களுக்கு நான்கு பெண்பிள்ளைகள். 2010ம் ஆண்டு காருண்யா சென்றபோது, ஒரு வாக்குத்தத்த அட்டையைக் கொண்டு வந்தேன். அதில், "உன் பிள்ளைகளெல்லாரும் கர்த்தரால் போதிக்கப்பட்டிருப்பார்கள்; உன் பிள்ளைகளுடைய சமாதானம் பெரிதாயிருக்கும்" (ஏசாயா 54:13) என்ற வசனம் எழுதப்பட்டிருந்தது. என் பிள்ளைகள் படிக்கும் மேசையின்மேல் அதை மாட்டிவைத்து, அவர்கள் படிப்பதற்கு முன்பு ஜெபித்து வந்தேன்.

டியூஷன் படிக்காமலே என் மூத்த மகள் எபினா ஜேம்ஸ், 10ம் வகுப்பில் 493/500 மதிப்பெண்ணும் 12-ம் வகுப்பில் 1100/1200 மதிப்பெண்ணும் பெற்றாள். பொருளாதார நிலையால் அவளால் எம்.பி.பி.எஸ். படிக்க முடியவில்லையென்றாலும் காருண்யாவில் ஜெபித்த பிறகு வாசல்கள் திறந்தன. சிங்கப்பூரில் மருத்துவம் படிக்க அவள் தேர்ந்தெடுக்கப்பட்டாள். சமீபத்தில்தான் படிப்பை முடித்துள்ளாள்.

இரண்டாவது மகள் பியூலா ஜெனிபர், பெருந்தொற்று காலத்தின்போது 12ம் வகுப்பில் 550/600 மதிப்பெண்கள் பெற்றாள். தற்போது ECE பொறியியல் படிப்பில் இறுதியாண்டு படிக்கிறாள்.

எங்களுக்கு இயேசு அழைக்கிறார் தொலைக்காட்சி நிகழ்ச்சியின் மூலம் செப்பனியா 9:17 என்ற தீர்க்கதரிசன வார்த்தை கிடைத்த பிறகு இரட்டைப் பிள்ளைகள் பிறந்தார்கள். அவர்கள் இருவரும் படிப்பில் சிறந்து விளங்கி 10-ம் வகுப்பில் 485/500 மதிப்பெண்களும், 12-ம் வகுப்பில் 585/600 மதிப்பெண்களும் பெற்று பள்ளியில் சிறப்பிடம் பெற்றனர். அவர்கள் வாழ்க்கை முழுவதும் இளம் பங்காளர் திட்டமும் தினசரி பிரார்த்தனையும் படிப்பிலும் ஆவிக்குரிய வளர்ச்சியிலும் ஊக்குவித்தன.

– **திருமதி. ஷீபா ஜேம்ஸ்**, தூத்துக்குடி.

## போராட்டங்களின் மத்தியில் வெற்றி



ஏழைப் பின்னணியை சேர்ந்த நான் குடும்பத்துடன் குடிசை வீட்டில் வசிக்கிறேன். என் தகப்பனார் தினக்கூலி வேலை செய்கிறார். அம்மா, மாலை தொடுக்கிறார்கள். மின் தடை காரணமாக அடிக்கடி நான் தெருவிளக்கின் கீழ் படிப்பேன். சிரமங்களின் மத்தியிலும் நான் ஒருபோதும் பள்ளிக்குச் செல்வதையோ, பாரிமுனையிலுள்ள இயேசு அழைக்கிறார் ஜெப கோபுரத்தில் ஜெபிப்பதையோ தவறவிட்டதில்லை. இளம் பங்காளர் திட்டத்தில் சேர்ந்தேன். சீஷா நல திட்டங்கள் மூலம் பள்ளிக்கு தேவையானவற்றையும் ஆடையையும் பெற்றுக்கொண்டேன்.

பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வின்போது, நான் தொடர்ந்து இயேசு அழைக்கிறார் 24 மணி நேர தொலைபேசி ஜெப ஊழியத்தை தொடர்பு கொண்டேன்.

10ம் வகுப்பு பொதுத் தேர்வில் தேவனுடைய கிருபையால் 434/500 மதிப்பெண்கள் பெற்றேன். என்னுடைய தெருவில் இதுவரை யாரும் இவ்வளவு மதிப்பெண் பெற்றதில்லை. என் பெற்றோருக்கு சந்தோஷத்தில் கண்ணீர் வந்துவிட்டது. ஆண்டவர் என்னை வறுமையிலிருந்து தூக்கி, வெற்றியை கொடுத்தார்; நான் இயேசுவுக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறேன். Dr. பால் தினகரனுக்கும் நன்றி. **– செல்வி செனிதா**, சென்னை.

இளம் பங்காளர்களுக்காக ஏறெடுக்கப்படுகிற வல்லமையான பிரார்த்தனையால் பாதுகாப்பு, செழிப்பு, வெற்றி ஆகிய ஆசீர்வாதங்கள் கிடைக்கின்றன. சாமுவேல், தேவ சமுகத்தில் வளர்ந்து உத்தமமும் செல்வாக்கும் கொண்ட தீர்க்கதரிசியானதுபோல், இந்தத் திட்டத்தில் இணையும் பிள்ளைகள் தேவனுடன் நெருங்கி ஜீவிக்கவும், தங்கள் தெய்வீக அழைப்பை நிறைவேற்றவும் வழிநடத்தப்படுகிறார்கள் (1 சாமுவேல் 2:26; 3:19). தொடர் ஜெப உதவியும் விசுவாசத்தை வளர்க்கும் செய்திகளும் அவர்களை ஆவிக்குரியவிதத்தில் பலப்படுத்தி வாழ்வின் போராட்டங்களை எதிர்கொண்டு தேவனுடைய உதவியால் வெற்றி பெற செய்கின்றன. உங்கள் பிள்ளைகளை இத்திட்டத்தில் சேர்ப்பது இளம் சாமுவேலைப்போல, ஆண்டவரின் தயவிலும் ஞானத்திலும் நோக்கத்திலும் வளரச் செய்யும்.

இளம் பங்காளர் திட்டத்தின் 40வது ஆண்டு நிறைவை முன்னிட்டு, அனைத்துப் பிள்ளைகளுக்கும், ஐந்து அப்பத்தையும் இரண்டு மீன்களையும் கொடுத்த சிறுபையன்போல, தேவ பணிக்கென பணத்தை ஒதுக்கும் பழக்கத்தை கொண்டு வரும்படி உண்டியல் ஒன்றை வெகுமதியாக அளிக்கிறோம். இளம் வயதிலேயே அவர்கள் மற்றவர்களுக்கு ஆசீர்வாதத்தை கொண்டு வருகிறவர்களாக மாறுவார்கள். ஆண்டவர் நிச்சயமாக அவர்கள் முயற்சியை பன்மடங்காக பெருகப் பண்ணி, தமது பரிபூரண ஆசீர்வாதங்களை அவர்கள்மேல் பொழிந்தருள்வாராக.

உங்கள் பகுதியில் அமைந்துள்ள ஜெப கோபுரத்திற்குச் சென்று உண்டியலை பெற்றுக்கொள்ளுங்கள் அல்லது உண்டியல் வேண்டும் என்று கடிதம் எழுதுங்கள்.

முகவரி: ஜெப கோபுரம், 16, Dr. டி.ஜி.எஸ். தினகரன் சாலை, சென்னை 600 028.




**இளம் பங்காளருக்கான ஆசீர்வாதங்கள்:**

- இளம் பங்காளர் அனுப்பும் காணிக்கை ரூ.5,000/- அடைந்ததும் இளம் பங்காளர்களுக்கு சான்றிதழும், வாக்குத்தத்தமும் அனுப்பி வைக்கப்படும்.
- இளம் பங்காளரின் பிறந்தநாளின்போது ஜெப வீரர் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு ஜெபிப்பார்கள்.
- இளம் பங்காளரின் பெயர்களை 'இயேசு அழைக்கிறார்' ஜெப கோபுரத்தில் ஜெப வீரர்கள் அனுதினமும் உச்சரித்து, இத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தெய்வீக ஆசீர்வாதங்களை அவர்கள் பெறும்படி ஜெபிக்கிறார்கள்

## இளம் பங்காளர் திட்டத்தில் இணைந்திடுங்கள்

மாதந்தோறும் ரூ. 300/- ரூ.500/- ரூ.1000/- அனுப்பி இயேசு அழைக்கிறார் இளம் பங்காளர் திட்டத்தில் இணைந்து கொள்ளலாம்.

**மேலும் விவரங்களுக்கு:**

* ஜெப கோபுரம்: உங்கள் பகுதியிலிருக்கும் இயேசு அழைக்கிறார் ஜெப கோபுரத்தை அணுகலாம்
* இணையதளம்: www.jesuscalls.org
* வாட்ஸ்அப்: 98409 00477
* மின்னஞ்சல்: ypp@jesuscalls.org

இளம் பங்காளர் திட்டத்திற்குக் காணிக்கைகளை அனுப்பக்கூடிய வழிகளை இந்த இதழின் 17-ம் பக்கத்தில் காணலாம்.



குடும்ப பகுதி

# தேவனுடைய இரக்கமுள்ள இருதயம்

“ஆனாலும் உங்களுக்கு இரங்கும்படி கர்த்தர் காத்திருப்பார், உங்கள்மேல் மனதுருகும்படி எழுந்திருப்பார்; கர்த்தர் நீதிசெய்கிற தேவன்; அவருக்குக் காத்திருக்கிற அனைவரும் பாக்கியவான்கள்” (ஏசாயா 30:18)

இந்த வசனத்தில் ஏசாயா ஆழமான ஒரு காரியத்தை வெளிப்படுத்துகிறார். நமது வல்லமையுள்ள தேவன், அண்ட சராசரங்களையும் படைத்தவர், பரலோகத்தையும் பூமியையும் ஆளுகை செய்கிறவர் நம்மீது இரக்கமாக இருக்க, அவர் நம்மை ஆசீர்வதிக்க காத்திருக்கிறார். நாம் அவருக்கு தேவை என்பதினால் அல்ல; அவர் நம்மை நேசிப்பதால், அப்படி காத்திருக்கிறார்! நாம் தகுதி இல்லாதவர்களாக இருந்தாலும் அவர் மனதுருக்கமுள்ளவராக, பொறுமையாக இருக்கிறார்.

**“கர்த்தர், இரக்கமும், கிருபையும், நீடிய சாந்தமும், மகா தயையும், சத்தியமுமுள்ள தேவன்” (யாத்திராகமம் 34:6)**

நாம் அவரை நோக்கி கூப்பிடும்போது, குறிப்பாக, நம் குடும்பத்திற்காக கூப்பிடும்போது அவர் கவனித்து கேட்கிறார். அவர் நம்மேல் இரக்கம் கொள்கிறார்; தமது ஏற்ற வேளையில் நமக்கு பதிலளிக்கிறார். சில வேளைகளில் நாம் தேவன் ஏன் நம்மை காத்திருக்கப்பண்ணுகிறார்? ஏன் நம்முடைய குடும்பத்தைப் பற்றிய நமது ஜெபத்திற்கு பதிலளிக்காமல் இருக்கிறார்? என்று நினைக்கலாம். ஆனால், “அவர் சகலத்தையும் அதினதின் காலத்திலே நேர்த்தியாகச் செய்திருக்கிறார்” என்று வேதம் சொல்லுகிறது (பிரசங்கி 3:11). அவருடைய வேளை ஒருபோதும் தாமதமாகவோ, சீக்கிரமாகவோ அமைவதல்ல. அது எப்போதும் நேர்த்தியானதாக இருக்கிறது.



“நோவா பேழையை ஆயத்தம் பண்ணும் நாட்களிலே, தேவன் நீடிய பொறுமையோடே காத்திருந்தார்” (1 பேதுரு 3:20). நோவா எவ்வளவு காலம் பேழையைக் கட்டினார் என்று தெரியுமா? ஆராய்ச்சியாளர்கள் ஏறக்குறைய 120 ஆண்டுகள் என்று கூறுகிறார்கள். அதுவரை தேவன், அவரது மக்கள் மனந்திரும்புவதற்காக பொறுமையாக காத்திருந்தார். அவர், அவர்களை நியாயம் தீர்க்க அவசரப்படவில்லை. இதைப்போல, முரட்டாட்டமுள்ள இஸ்ரவேலர்கள் அவருடைய தீர்க்கதரிசிகளைப் புறக்கணித்தார்கள். அவரை நம்புவதற்கு பதிலாக எகிப்தை சார்ந்திருந்தார்கள். ஆனாலும், “உங்களுக்கு இரங்கும்படி கர்த்தர் காத்திருப்பார்” என்று கூறுகிறது (ஏசாயா 30:18). அவர்களுடைய பிடிவாதத்தின் மத்தியிலும், தேவன், அவர்கள் மனந்திரும்பினால் அவர்களை ஆசீர்வதிக்க முடியும் என்று காத்திருந்தார்.

அன்பானவர்களே, ஒருவேளை நீங்களும் இன்று, உங்கள் குடும்ப சமாதானத்திற்காக, உங்கள் திருமண வாழ்க்கை மறுபடியும் கட்டப்பட, உங்கள் பிள்ளைகள் பக்தியுள்ள வழிகளில் நடக்க, பொருளாதார தேவைகளுக்காக ஜெபித்துக்கொண்டிருக்கலாம். தேவன் மௌனமாக இருப்பதாக நீங்கள் நினைக்கலாம். ஆனால், அவர் உங்களை அலட்சியம் பண்ணவில்லை; அவருடைய ஏற்ற வேளை வருவதற்காக காத்திருக்கிறார்.

**“நீங்கள் மனந்திரும்பி அமர்ந்திருந்தால் இரட்சிக்கப்படுவீர்கள்; அமரிக்கையும் நம்பிக்கையுமே உங்கள் பெலனாயிருக்கும்” (ஏசாயா 30:15).** நீங்கள் அமர்ந்திருந்து அவரே தேவனென்று அறிந்து கொள்ளுங்கள் (சங்கீதம் 46:10). பொறுமையாக காத்திருக்கும்போதும், கண்ணீரின் மத்திலும் அவரை நம்புங்கள்.

**“நீங்கள் எதிர்பார்த்திருக்கும் முடிவை உங்களுக்குக் கொடுக்கும்படிக்கு நான் உங்கள்பேரில் நினைத்திருக்கிற நினைவுகளை அறிவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்;**

EvangelinePaulDhinakaran | evangeline@jesuscalls.org

**அவைகள் தீமைக்கல்ல, சமாதானத்துக்கேதுவான நினைவுகளே**'' (எரேமியா 29:11) என்று நமக்கு நினைவுப்படுத்துகிறது. அவரது நினைவுகள் உங்கள் குடும்பத்தையும் உள்ளடக்கியதாக இருக்கிறது. அவரது இருதயம் உங்கள் குடும்பத்திற்காக துடிக்கிறது.

> **தேவன் மௌனமாக இருந்தால், அவர் உங்களை அலட்சியம் பண்ணுவதாக அர்த்தம் அல்ல. அவர் உங்களை ஆசீர்வதிக்க ஏற்ற வேளைக்காக காத்திருக்கிறார்**

ஆம், 'ஆண்டவரை நம்புங்கள்' என்று கூறுவது எளிதுதான். ஆனால் உபத்திரம் வரும்போது, நமக்கு அன்பானவர்கள் நோயுற்று இருக்கும்போது, வேலை இழக்க நேரிடும்போது, குடும்பத்தில் சண்டை வரும்போது அது சாத்தியமில்லாததாக தெரியலாம். ஆனால், ''**வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்**'' (மத்தேயு 11:28) என்று அன்பான இயேசு அழைக்கிறார். அவர் உங்களையும், உங்கள் குடும்பம் முழுவதையும் சமாதானத்திற்கு நேராக அழைக்கிறார்.

சசாங் பிரதான் என்ற சகோதரர் ஒரு பிளம்பிங் கம்பெனியில் மேற்பார்வையாளராக பணியாற்றினார். 15 ஆண்டுகளாக அவரது குடும்பம், வாடகைக்கு வீடு மாறிக்கொண்டே இருந்தது. தங்களுக்கு ஒரு சொந்த வீடு கிடைக்கும் என்ற கனவில் அவர்கள் இருந்தார்கள். ஆனால், 2020-ம் ஆண்டு, கோவிட்-19 பெரும் தொற்றின் போது, அவருக்கு வைரஸ் தொற்றி மிகவும் நோயுற்றார். வேலையை இழந்தார். அவர்களுக்கு கனவு நனவாகாததுபோல் தோன்றியது. ஆனால், தேவன் வேறொரு திட்டத்தை வைத்திருந்தார். அவரது மனைவி ராஸ்மிகா ராய்ப்பூரிலுள்ள ஜெப கோபுரத்திற்கு சென்று, தன்னுடைய இருதயம் முழுவதையும் ஆண்டவரிடம் ஊற்றினார்கள். அங்கிருந்த ஜெப வீரர்களிடம் விசுவாசத்தில் தன்னோடு நிற்கும்படி கேட்டுக்கொண்டார்கள். அதேபோல, ஜெப வீரர்களும் தொடர்ந்து அவர்களுக்காகவும், அவர்கள் கணவருக்காகவும், குடும்பத்திற்காகவும் ஜெபித்தார்கள்.

ஒரு நாள் சசாங் அவராகவே ஒரு ஜெப வீரரிடம் பேசினார். அவர் சொந்தமாக பிளம்பிங் தொழிலை செய்யும்படி ஒரு ஆலோசனை கூறினார். சசாங் விசுவாசத்தில் அவருக்குக் கீழ்ப்படிந்தார். அன்றே ஒரு பிளம்பிங் நிறுவனம் அவரைத் தொடர்பு கொண்டு, ஒரு வேலையைக் கொடுத்தது. ஒரு வார காலத்திற்குள் 70,000 ரூபாய் சம்பாதித்தார். ஆண்டவருடைய ஆசீர்வாதத்தை அவர் பெற ஆரம்பித்தார்.

இன்று சசாங் 10 இடங்களில் பணிபுரியும் 20 வேலையாட்களை நிர்வகிக்கிறார். 2023 நவம்பர் 23-ம் தேதி அவருடைய மகள், ஆரா பிறந்தநாளின்போது குடும்பமாக ஒரு தொலைக்காட்சி நிகழ்ச்சியை ஸ்பான்சர் செய்தார்கள். என்னுடைய கணவர், குறிப்பாக அவருக்கு ஒரு புதிய வீடு கிடைக்க வேண்டும் என்று ஜெபித்தார். தேவன் விரைவிலேயே அவர்களுக்கு சொந்தமாக வீட்டை கொடுத்து, அவர்களுடைய கனவை நனவாக்கினார். சசாங், இப்போது தன்னுடைய தொழிலின் மூலம் ஆண்டவரை கனப்படுத்துகிறார். வணிக ஆசீர்வாத திட்டத்திலும் சேர்ந்திருக்கிறார்.

அன்பானவர்களே, உங்கள் குடும்பத்திற்கு, உங்கள் மனைவிக்கு, கணவருக்கு, பிள்ளைகளுக்கு மனதுருக்கத்தைக் காட்ட ஆண்டவர் காத்திருக்கிறார். மனந்தளர்ந்து போகாதீர்கள். தொடர்ந்து அவரைத் தேடுங்கள்; அவரை நம்புங்கள். வாக்குத்தத்தங்களை உங்கள் குடும்பத்தின் மேல் உரைத்திடுங்கள். நீங்கள் நினைப்பதைக் காட்டிலும் சீக்கிரமாகவே நன்மையான மாற்றம் வரும். தேவன் உங்களுடைய குடும்பத்தை ஆசீர்வதிக்க வாஞ்சையாக இருக்கிறார். ஏனென்றால், அவர் மனதுருக்கமுள்ள தகப்பனாக இருக்கிறார்.

## ஜே.சி. ஹவுஸில் பரலோக மகிமை இறங்கியது

சென்னை, பாரிமுனையில் உள்ள ஜே.சி.ஹவுஸில் 2025 ஜூன் 13 அன்று (வெள்ளிக்கிழமை)ஏறத்தாழ 1,500 பேர் கூடி வந்தனர். தேவ வல்லமையை அனுபவிக்கவும் அவரது குரலை கேட்கவும் அவர்கள் தாகமாய் இருந்தனர். சகோ.டேனியல் டேவிட்சன், சகோதரி ஸ்டெல்லா ரமோலா, துதி ஆராதனையை நடத்தினர். அதைத் தொடர்ந்து சகோதரி ஸ்டெல்லா ரமோலா, ஆதியாகமம் 16:3 என்ற வசனத்தின் அடிப்படையில், கண்ணோக்கும் கர்த்தர், அற்புதவிதத்தில் இடைப்படும் கர்த்தர் என்று அளித்த செய்தி, தீர்க்கதரிசனமாக அமைந்தது.



ஊழியத்தில் என் அன்பு உடன் பங்காளர்களே, இந்த பணிக்கு உண்மையான பங்காளராக இருப்பது எவ்வளவு முக்கியம் என்பது அறிந்து மிகுந்த நன்றியோடு இதை எழுதுகிறேன். உங்கள் ஜெபம், உதாரத்துவம், அசையாத அர்ப்பணிப்பு ஆகியவை இயேசுவின் அன்பை எண்ணற்ற இருதயங்களுக்குக் கொண்டு செல்ல உதவுகிறது. உங்களது உதவியினால் வாழ்க்கைகள் மறுரூபமாகிவிட்டன; பாரங்கள் அகன்றுள்ளன; கண்ணீர் சாட்சியாக மாறியுள்ளது.

இந்த தெய்வீக பணியில் நீங்கள் தொடர்ந்து விதைக்கும்போது, ஆண்டவரின் ஆசீர்வாதங்களை அனுபவிப்பீர்கள்; எதிர்பாராத வாசல்களை அவர் திறப்பார்; ஏற்ற நேரத்தில் பதிலளிப்பார்; உங்கள் தேவைகள் எல்லாவற்றையும் தம்முடைய ஐசுவரியத்தின்படி சந்திப்பார். ‘‘என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார்’’ (பிலிப்பியர் 4:19). இந்த வாக்குத்தத்தம், உங்கள் அன்றாட வாழ்வில் உண்மையாவதாக. உங்கள் இருதயத்தில் சமாதானமும், உங்கள் அன்றாட வாழ்வில் பலனும், உங்கள் இல்லத்தில் சந்தோஷமும் நிரம்பி வழிவதாக.

கடந்த மாதம் முழுவதும் ஆண்டவருடைய அற்புதமான கிரியைகள் ஊழியத்தில் நடந்தது. நீங்கள் எங்களோடு ஜெபத்திலும் எதிர்பார்ப்பிலும் இணைந்து நிற்கும்படி, அவற்றை உங்களோடு பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்.



# உள்ளத்தின் ஆழத்திலிருந்து பேசுகிறேன்...

## துதி குறிப்பு

### விசேஷித்த கூட்டங்கள்

2025, ஜூன் 7-ம் தேதி, என் மகள் ஸ்டெல்லா ரமோலாவும் மருமகன் டேனியல் டேவிட்சனும் சென்னை, மடிப்பாக்கத்தில் நடந்த சிறப்பு ஆசீர்வாத கூட்டத்தில் செய்தி அளித்தார்கள். ஆராதனை, செய்தி மற்றும் ஜெபத்தின் மூலமாக அநேகர் சுகம் பெற்றனர்; தங்கள் வாழ்க்கை திரும்ப கட்டப்பட்டனர். டேனியல் டேவிட்சன், அபிஷேக ஆராதனை வேளையை நடத்தினார். ஸ்டெல்லா ரமோலா, உடைந்த குடும்பங்கள் கட்டப்படும்படி, இழந்தவற்றை திரும்பப் பெறும்படி, காயங்கள் கட்டப்படும்படி, கைகளின் கிரியைகளை ஆசீர்வதிக்கும்படி நேரத்திற்கேற்ற ஒரு தேவசெய்தி வழங்கினாள். இருதயங்கள் தொடப்பட்டன; வாக்குத்தத்தங்கள் பெறப்பட்டன; தேவ நாமம் மகிமைப்பட்டது.

2025, ஜூன் 13-ம் தேதி அவர்கள் இருவரும் சென்னை பாரிமுனையில் உள்ள ஜே.சி. ஹவுஸ் ஜெப கோபுரத்தில் ஊழியம் செய்தார்கள். தேவ பிரசன்னம் அந்த இடத்தை நிரப்பியது; மக்களின் வாழ்க்கைகள் மறுரூபமாகின.

### இளம் பங்காளர் திட்டம்

**‘‘உன் பிள்ளைகளெல்லாரும் கர்த்தரால் போதிக்கப்பட்டிருப்பார்கள்; உன் பிள்ளைகளுடைய சமாதானம் பெரிதாயிருக்கும்’’**

**(ஏசாயா 54:13)**

கடந்த 40 ஆண்டுகள், இளம் பங்காளர் திட்டம் பல லட்சக்கணக்கான இளம் பிள்ளைகளுக்கு, மன்றாட்டு ஜெபத்தின் மூலம் பாதுகாப்பையும், ஞானத்தையும், செழிப்பையும் அருளிச் செய்து, ஆசீர்வாதமாக இருந்து வருகிறது. இதன் விளைவாக இளம் பங்காளர்கள் தங்கள் வாழ்வில் பிரகாசித்து, அனைத்து பகுதிகளிலும் செழித்துள்ளனர். இந்த இதழின் 8-வது பக்கத்தில் அவர்களுடைய சாட்சியை நீங்கள் வாசிக்கலாம். உங்கள் பிள்ளைகளையும் இந்தத் திட்டத்தில் இணைத்து, ஆண்டவருடைய தயவு, அவர்களை மகா உயரங்களுக்கு உயர்த்துவதைக் காணுங்கள்.

### இவாஞ்சலின் மெட்ரிக்குலேஷன் பள்ளி

**“இயேசுவானவர் ஞானத்திலும், வளர்த்தியிலும், தேவகிருபையிலும், மனுஷர் தயவிலும் அதிக மதிகமாய் விருத்தியடைந்தார்” (லூக்கா 2:52)**

ஜூலை 15ம் தேதி இவாஞ்சலின் மெட்ரிக்குலேஷன் மேல் நிலைப்பள்ளி 34-வது ஆண்டு விழாவை காண்கிறது. ஆண்டவருடைய உண்மையான வழி நடத்துதலின்படி, முழுமையான கல்வி, ஒழுக்கம், கிறிஸ்தவ மாண்பு இவற்றை பயிற்றுவித்து வருகிறது. நடந்து முடிந்த தேர்வில், யாஸ்மிஹா C.S. பள்ளியில் முதல் மதிப்பெண் (492/500) பெற்றுள்ளார். கணிதத் திலும் அறிவியலிலும் முழு மதிப்பெண்கள் பெற்றுள் ளார். அவள் ஆண்டவர் பெயரில் விசுவாசம், கடின உழைப்பின் மீது நம்பிக்கை, முழுமனதோடு கீழ்ப் படிதல் இவற்றிற்கு எடுத்துக்காட்டாக இருக்கிறாள். நம்முடைய மாணவர்கள் அநேகர் சிறந்த மதிபெண்களைப் பெற்றிருக் கின்றனர். உங்கள் பிள்ளை களையும் கோயம்புத்தூரி லுள்ள இவாஞ்சலின் மெட்ரிக் குலேஷன் மேல்நிலைப் பள்ளியில் சேர்த்து அவர்களு டைய கல்வி வாழ்க்கை, குணாதிசயங்கள், ஆவிக் குரிய வளர்ச்சி இவற்றில் மாற்றத்தை காணுங்கள்.

### ஃபேமிலி சேனல்

**“ஜாதிகளுக்குள் அவருடைய மகிமையையும், சகல ஜனங்களுக்குள்ளும் அவருடைய அதிசயங்களையும் விவரித்துச் சொல்லுங்கள்” (சங்கீதம் 96:3)**

True Friend Manage ment Support Services Pvt Ltd, நிறுவனத்தின் ஃபேமிலி சேனல் அனைத்து குடும்பங்களாலும் கொண்டாடப்படுகிறது. உத்த மத்தை, ஒற்றுமையை, அன்பை, சமுதாயத்தில் பரப்புகிற ஐந்து ஆண்டுகளை நிறைவு செய்துள்ளது. இதைப் பார்க்கிறவர்கள், ஒவ்வொரு நாளும் அளிக்கும் வல்லமையான சாட்சிகளைக் கேள்விப்பட்டு, எங்களை நாங்களே தாழ்த்திக்கொள்கிறோம். ஜீவனைத் தருகிற செய்தி, ஆத்துமாவை நெகிழ்ச்சி யாக்குகிற பாடல்கள், வேதாகம அடிப்படையிலான நிகழ்ச்சிகள் இந்தச் சேனலில் ஒளிபரப்பப்படுகின்றன.

உங்களுடைய ஆவிக்குரிய பயணத்தை இன்னும் மேம்படுத்துவதற்கு, Family என்ற நிகழ்ச்சி ஒளிபரப்பப்படுகிறது. இதில் எங்கள் குடும்பத்தினர் பக்தியுடன்கூடிய ஞானம், விசுவாசத்தில் நிறைந்த குடும்பங்களைக் கட்டுவதற்கு ஆலோசனைகளை வழங்குகிறோம். வெவ்வேறு வயது தரப்பினருக்கான இன்னும் பலதரப்பட்ட நிகழ்ச்சிகள் இருக்கிறது. நீங்களும் உங்கள் குடும்பத்தினரும் இவற்றைப் பார்த்து, உற்சாகப்பட்டு, ஆவிக்குரிய வளர்ச்சியை அனுபவிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

> உங்கள் ஜெபம், உதாரத்துவம், அசையாத அர்ப்பணிப்பு ஆகியவை இயேசுவின் அன்பை எண்ணற்ற இருதயங்களுக்குக் கொண்டு செல்ல உதவுகிறது

### ஜெபக் குறிப்புகள்

#### வரவிருக்கும் கூட்டங்கள்

2025 ஜூலை 13 - ஆசீர்வாத கூட்டம் - பெதஸ்தா

2025 நவம்பர் 28 - 30 - மகாராஷ்டிரா பிரார்த்தனை திருவிழா, பூனா

இந்த நிகழ்ச்சிகளை நீங்கள் நினைவுக்கூர்ந்து இதற்காக ஜெபித்து, ஆண்டவர் உங்களை வழி நடத்துகிறபடி ஆதரவு தர வேண்டுகிறேன்.

#### விசேஷித்த நாட்கள்

**“நீதிமானுடைய பேர் புகழ்பெற்று விளங்கும்” (நீதிமொழிகள் 10:7)**

ஜூலை 1-ம் தேதி, எங்கள் குடும்பத்திற்கும், இயேசு அழைக்கிறார் ஊழியத்திற்கும் மிக முக்கியமான நாளாகும். அன்பின் அப்போஸ்தலர், என் தந்தை Dr. டி.ஜி.எஸ். தினகரனுடைய 90-வது பிறந்த நாள். அவருடைய தியாகமான வாழ்க்கையை, ஆண்டவருடைய அழைப்புக்கு ஓய்வு இல்லாத அர்ப்பணிப்பை நினைவுகூரும்போது நம்முடைய இருதயங்கள் நன்றியினால் நிரம்புகின்றன. மன்றாட்டு, அன்பு, மனதுருக்கம், இவற்றில் அவருடைய பாரம்பரியம் தொடர்ந்து நம்மை ஏவுகிறது. தெய்வீக அழைப்பை அசையாத விசுவாசத்தோடு கொண்டுச்செல்ல எங்கள் குடும்பத்திற்காக தொடர்ந்து ஊக்கமாக ஜெபித்துக் கொள்ளுங்கள்.

ஜூலை 15 - இன்னொரு விசேஷித்த நாள். என் மகன் சாமுவேல் தினகரனுடைய பிறந்த நாள். சாமுவேலின் வாழ்க்கையிலும், ஊழியத்திலும் ஆண்டவருடைய உறுதியான கரம் இருந்து வருவதற்காக அவருக்கு நன்றி சொல்லுகிறேன். உலகம் முழுவதும் நடக்கும் இயேசு அழைக்கிறார் கூட்டங்களில் அவனைப் பயன்படுத்த தேவன் உண்மையுள்ளவராக, கிருபையுள்ளவராக இருந் தார். அவனுடைய ஆவியில் நிறைந்த ஜெபங்கள் மூலம் அநேகர் அற்புதங்களைக் கண்டனர். இளைய

தலைமுறையினருக்கு ஃபேமிலி சேனலில் ஒளிபரப்பாகும் UTurn ஊழியத்தின் மூலம், கேள்வி பதில்கள் மூலம், குறும்படங்கள் மூலம் தெளிவான பதிலைக் கொடுக்கிறது. இயேசு அழைக்கிறார் ஊழியத்தில், செயல்பாடுகளின் துணை தலைவராகப் பொறுப்பு வகிக்கும் சாமுவேல், UTurn ஊழியத்தையும் தலைமை வகித்து நடத்துகிறார். தேவன் அவரை பலப்படுத்தவும், தமது தெய்வீக ஞானத்தினால் நிரப்பவும், தம்முடைய ராஜ்யத்தின் விரிவுக்கென்று பயன்படுத்தவும் உங்கள் அனுதின ஜெபங்களில் ஜெபித்துக்கொள்ளுங்கள்.

ஒரு மகிழ்ச்சியான செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். என்னுடைய மகன் சாமுவேல் தினகரனுக்கும், மருமகள் Dr. ஷில்பா தினகரனுக்கும், ஆண் குழந்தை ஜேடன் கிறிஸ் தினகரன் பிறந்திருக்கிறான் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அவன் நல்ல சுகமும், ஞானமும், தேவ தயவும், மனுஷர் தயவும் பெற்று வளரும்படி ஜெபித்துக்கொள்ளுங்கள்.

> உங்கள் பிள்ளைகளையும் இளம் பங்காளர் திட்டத்தில் இணைத்து, ஆண்டவருடைய தயவு, அவர்களை மகா உயரங்களுக்கு உயர்த்துவதைக் காணுங்கள்

அன்பான பங்காளரே, நீங்கள் ஏறெடுக்கிற ஒவ்வொரு ஜெபமும், அனுப்புகிற ஒவ்வொரு காணிக்கையும் உண்மையாகவே முக்கியத்துவம் வாய்ந்தவை. "**அவர்கள் கூப்பிடுகிறதற்குமுன்னே நான் மறுஉத்தரவு கொடுப்பேன்; அவர்கள் பேசும்போதே நான் கேட்பேன்**" (ஏசாயா 65:24) என்று சொல்லுகிறபடி, ஆண்டவர் உங்கள் இருதயத்தின் வேண்டுதலைக் கவனிக்கிறார். உங்களுக்காக அவர் கிரியை செய்கிறார் என்பதை நிச்சயித்துக்கொள்ளுங்கள். அவருடைய உறுதியான அன்பும், இரக்கமும் உங்களை வழிநடத்துவதாக. அவருடைய உண்மையை நம்பியிருக்கும், தமது கரத்தின் கிரியையான உங்களை அவர் ஒருபோதும் கைவிட மாட்டார்.

உங்களுக்காக ஜெபிக்கும் அன்பு சகோதரன்,

Dr. பால் தினகரன்.





# இயேசு அழைக்கிறார் பத்திரிகை

**இன்றே சந்தா செலுத்துங்கள்! உங்கள் பிரதியைப் பெற்றுக்கொள்ளுங்கள்**

இயேசு அழைக்கிறார் பத்திரிகை லட்சக்கணக்கான மக்களின் வாழ்வுக்கு ஆசீர்வாதமாக விளங்குகிறது. இப்போது டிஜிட்டல் வடிவிலும் வெளிவருகிறது; அனைத்து பங்காளர்களுக்கும் மின்னஞ்சல் மூலமாகவும் வாட்ஸ்அப் மூலமாகவும் அனுப்பப்படுகிறது. இயேசு அழைக்கிறார் பத்திரிகையின் அச்சுப் பிரதி வேண்டுமென்றால் இன்றே சந்தா செலுத்துங்கள். நாங்கள் அனுப்பி வைப்போம்.

## ஆண்டு சந்தா: ரூ.500/-

ஊக்கம், சுகம், விசுவாச உந்துதலை தேடுகிறீர்களா? மாதந்தோறும் தேவனுடைய வாக்குத்தத்தங்கள் அடங்கிய இயேசு அழைக்கிறார் பத்திரிகையை வாசியுங்கள்.

வாழ்க்கை மாறியது குறித்த சாட்சிகள், வல்லமையான ஜெபங்கள், சிறுபிள்ளைகள், வாலிபர், குடும்பத்தினர், முதியோர் என அனைத்து வயதினருக்குமான ஆவிக்குரிய சத்தியங்கள், விசுவாசத்தை தூண்டும் செய்திகள் ஆகியவற்றை தாங்கி வருகிறது.

7 மொழிகளில் வெளிவருகிறது. உலகமெங்குமுள்ள மக்களின் வாழ்வில் கிறிஸ்துவின் அன்பால் ஒளியேற்றுகிறது.

இணையதளம்: www.jesuscalls.org

வாட்ஸ்அப்: 98409 99923

பங்காளர் சேவை: 044-23456677 (காலை 8 முதல் இரவு 8 மணி வரை)

# ஷில்லாங்கின் இதயங்களுக்கு இயேசு

## ஷில்லாங் ஜெப கோபுரம்

### மலை மீது இருக்கும் பட்டணத்திற்கு வெளிச்சம்

இயேசு அழைக்கிறார் ஜெப கோபுரங்கள், பரலோகம் பூமியை சந்திக்கும் இடங்களாக விளங்குகின்றன. வாழ்க்கை, ஜெபத்தின் மூலமாக மாறுகிறது. தினமும் ஆண்களும் பெண்களும் ஷில்லாங் ஜெப கோபுரத்திற்கு மனதில் பாரத்தோடு வருகின்றனர்; சமாதானத்தோடும், சுகத்தோடும், புதுப்பிக்க நம்பிக்கையோடும் செல்கின்றனர்.





### ஷில்லாங்

மேகாலயாவில் அமைந்துள்ள மலைப்பாங்கான பட்டணம் ஷில்லாங். இயற்கை எழில் மிக்கது. அங்கு வாழும் 5.5 லட்சம் மக்களும் வேலையின்மை, கிராமங்கள் முன்னேறுவதற்கான வசதிகள் குறைவு, குடும்ப பிரச்னைகள், திருச்சபைகளிடையே ஐக்கியமின்மை போன்றவற்றால் மௌனமாக தவிக்கிறார்கள். இதற்கிடையே ஆழமான ஆவிக்குரிய தாகமும் இருக்கிறது. ஷில்லாங் ஜெப கோபுரம், ஜெபத்தின் மூலம் இந்த தேவைகளை சந்திக்கிறது.

### தொண்டை புற்றுநோயிலிருந்து சுகம்

எனக்கு தொண்டையில் புற்றுநோய் இருப்பதாக கண்டறிந்தார்கள். நான், மாதந்தோறும் ஷில்லாங் ஜெப கோபுரத்திலிருந்து ஜெப வீரர்களை எனக்காக ஜெபிக்கும்படி வீட்டுக்கு அழைப்பேன். நான் இயேசு அழைக்கிறார் பங்காளராக இருக்கிறேன். தேவனுடைய கிருபையால் புற்றுநோயிலிருந்து சுகம் பெற்றிருக்கிறேன்.

இதைப் போன்று கணக்கற்ற மக்கள் தினமும் ஷில்லாங் ஜெப கோபுரத்தின் மூலம் ஆசீர்வாதம் பெறுகிறார்கள். ஒவ்வொரு மன்றாட்டு ஜெபமும் இந்தப் பட்டணத்திலும் சுற்றிலும் இருக்கும் கிராமங்களிலும் சுகம், ஒற்றுமை, செழிப்பை வேண்டி விதைக்கப்படுகின்றன.

---

### ஷில்லாங்கை தொடுவதற்கான தரிசனம்

ஷில்லாங்கிலும் சுற்றுப்புற கிராமங்களிலும் பெருகி வரும் ஆவிக்குரிய தாகத்தை தணிப்பதற்காக நம் சேவைகளை விரிவாக்குகிறோம்.

நமது இலக்கு:
- ◆ 500 ஜெப வீரர்கள்
- ◆ 100 ஸ்தானாபதிகள்
- ◆ 50 வாலிப ஊழிய தலைவர்கள்
- ◆ 100 நற்செய்தியாளர்கள்

இவர்கள் குழுவாக ஜெபம், வெளியிட ஊழியம், எழுப்புதல் முயற்சிகள் மூலமாக மக்களை தொடுவார்கள்.

விரிவாக்க பணிக்கு கணக்கிடப்பட்ட தொகை: பெருகிவரும் வருகையாளர்களை அமர வைக்கவும், அவர்கள் தேவைகளை சந்திக்கும் ஊழியத்தை செய்யவும் ஷில்லாங் ஜெப கோபுரம், பெரியதொரு இடத்துக்கு இடம் பெயர ஆயத்தமாகி வருகிறது. தேவனால் நியமிக்கப்பட்ட இந்த ஊழியத்தை தாங்குங்கள்.

உங்கள் ஆதரவு தேவை.

பெரிய இடத்துக்கு இடம் பெயர்தல்: ஜெபம் தேவைப்படும் அதிக மக்களுக்கு சேவை செய்தல்

மாத வாடகை மற்றும் செயல்பாட்டு செலவு

மொத்தமாக கணக்கிடப்பட்டுள்ள தொகை: ரூ.40 லட்சம்

### நீங்கள் எப்படி பங்காளராகலாம்?

தன்னார்வ ஊழியர்: இந்த தேவ பணியில் ஜெப வீரராக, வாலிப ஊழிய தலைவராக, ஸ்தானாபதியாக அல்லது நற்செய்தியாளராக இணைந்திடுங்கள். volunteer@jesuscalls.org என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அல்லது .............. என்ற எண்ணில் ஷில்லாங் ஜெப கோபுரத்தை காலை 8 முதல் இரவு 8 மணி வரை தொடர்புகொண்டு பதிவு செய்துகொள்ளுங்கள்.

உதாரத்துவமாக கொடுங்கள்: ஷில்லாங்கிலும் சுற்றுப்புற கிராமங்களிலும் ஆயிரக்கணக்கான மக்களின் வாழ்வை தொடுவதற்கு உங்கள் பொருளாதார உதவி தேவை.

◆ ரூ.1,00,000 ◆ ரூ.50,000 ◆ ரூ.10,000 அல்லது ஆண்டவர் வழிநடத்தும் எந்த தொகையும் வழங்கி இந்த ஊழியத்தை தாங்குங்கள்

இணையதளம்: www.jesuscalls.org அல்லது QR Codeஐ ஸ்கேன் செய்யுங்கள்.

**நாம் இணைந்து ஷில்லாங் மக்களுக்கு சுகத்தை, நம்பிக்கையை, மாற்றத்தை கொண்டு வருவோம்.**

# கேள்வி பதில்

## சகோ. சாமுவேல் தினகரன் பதிலளிக்கிறார்...

திரு. ஃப்ரான்சிஸ் ஜோசப் கேள்வி

# கிறிஸ்தவ இளைஞர் அரசியலில் ஈடுபட முடியுமா?



அன்பு நண்பரே, இது சிந்தனையைத் தூண்டும் ஒரு முக்கியமான கேள்வி. நம்முடைய அழைப்பைப் புரிந்துகொள்ளுதல், நோக்கம், சமுதாயத்தில் விசுவாசிகளுடைய பங்கு இவற்றுக்கு இந்தக் கேள்வி ஒரு சவாலாக விளங்குகிறது. கிறிஸ்துவை பின்பற்றுகிற நாம் 'குழப்பம்' என்று எண்ணுகிற அரசியலில் நுழைய முடியுமா?

இதற்கு சாதரணமாக பதிலளிக்க விரும்புகிறேன்: ஆம், நம்மால் முடியும் - சில நேரங்களில், நாம் இணைந்தே ஆகவேண்டும்.

### நம்முடைய விருப்பம் இல்லை; ஆனால் தேவனுடைய விருப்பம்

கிறிஸ்தவர்களாக, நாம் நம்முடைய தெரிவுகளை நமது முன்னுரிமைகளுக்கு, வசதிகளுக்கு ஏற்ப செய்துகொள்ள அழைக்கப்படவில்லை. மாறாக, தேவனுடைய நோக்கத்தை தேடவும், அதற்கு நம்மை அர்ப்பணிக்கவுமே அழைக்கப்பட்டிருக்கிறோம். அந்த நோக்கமானது யாராவது ஒருவரை கல்விக்கு, வியாபாரத்துக்கு, மருத்துவத்துக்கு, கலைக்கு இல்லையென்றால் அரசியலுக்கு வழி நடத்தவேண்டும்.

சிலர், 'அரசியல் கறையானது' என்றும், அது ஒரு 'பாவமான துறை. அங்கு தேவனுக்கு இடமே இல்லை' என்று சொல்லக்கூடும். இப்படி யோசித்து பார்ப்போம்: வாழ்வின் எல்லா துறைகளிலும் பாவம் இருக்கிறது. எந்த தொழிலும் கறையற்றது அல்ல. தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் சில துறைகளின் இருளான பக்கத்துக்காக அதிலிருந்து விலகி இருந்தால் அங்கு வெளிச்சத்தை யார் கொண்டு வருவது?

இயேசு, நம்மை உலகிற்கு ஒளியாக இருக்க அழைத்திருக்கிறார். அந்த ஒளியானது திருச்சபைகளில், ஊழியங்களில் மட்டுமல்ல; நம்முடைய அலுவலகங்களிலும், வகுப்பறைகளிலும், ஸ்டுடியோக்களிலும், அரசு அலுவலகங்களிலும் வீசவேண்டும்.

### தேவன் ஆச்சரியமான வழிகளில் கிரியை செய்கிறார்

யோசேப்பின் வாழ்க்கையைப் பாருங்கள். அவனுக்கு குடும்பத்தின் ஆசீர்வாதத்தினால் எகிப்தில் தலைமைத்துவ பொறுப்பு கிடைக்கவில்லை. மாறாக, அவனுக்குத் துரோகம் செய்யப்பட்டது; குழிக்குள் தள்ளப்பட்டான்; அடிமையாக விற்கப்பட்டான். ஆனாலும், ஆண்டவருடைய ஆச்சரியமான, சர்வ வல்லமையான திட்டத்தின்படி யோசேப்பு, அந்நிய தேசத்தில் ஆளுகை செய்கிறவனாக உயர்ந்தான். அவன் ஞானமாக நிர்வாகம் செய்து, கொடிய பஞ்சகாலத்தில் தேசங்களை போஷிக்கிறவனாக மாறினான். யோசேப்புக்கு அரசியல் பயிற்சி இருந்ததா? இல்லை. அவனுக்கு ஆதரவு இருந்ததா? முதலில் இல்லை. ஆனால் தேவனுடைய அழைப்பு இருந்தது. அது எல்லாவற்றையும் வித்தியாசமானதாக மாற்றியது.

### ஆளுகை செய்வதற்கு வேதாகம கட்டளை

சரியான அதிகாரத் திற்கு எதிராக நாம் முரட்டாட்டம் செய்தோமானால் அது தேவன் நியமித்ததற்கு எதிராக

# அதிகாரத்தின் அரங்குகளில் நாம் தேவனுடைய குரலாக ஒலிப்போம்

செய்வதாகும். இதற்கு ஆளுகை என்பது தேவனுடைய திட்டத்திற்கு வெளியே அல்ல, அது அதனுடைய ஒரு பகுதியாக இருக்கிறது என்று அர்த்தம்.

தேவன், யாராவது ஒருவரை ஆளுகை செய்கிறவராக, தலைவராக நியமித்தால், விசுவாசிகளாகிய நாம், “அரசியல் தீங்கானது, அது தகுதியற்றது” என்று எப்படி கூற முடியும்? தேவன் ஒருவரை தலைமை தாங்க அழைத்தால் நாம் அந்த அழைப்பை கனப்படுத்தி ஆதரவு கொடுக்க வேண்டும்.

### அரசியல் தலைமைத்துவத்தின் வழியாக தேவனைக் கனப்படுத்துதல்

தாவீது, அவன் வெறுமனே ஆளுகைச் செய்கிறவனாக மட்டுமல்ல; அவன் தேவனால் அபிஷேகம் செய்யப்பட்டிருந்தான். அவனுடைய தலைமைத்துவத்தின் மூலம் தேவன் யுத்தங்களைச் செய்து தமது ஜனங்களுக்கு பாதுகாப்பை கொடுத்தார். அவனுடைய குமாரனாகிய சாலொமோன் மூலமாக, தேவன் சமாதானத்தையும் செழிப்பையும் உண்டாக்கினார். தலைமைத்துவம் தேவனுக்கு உரியது.

அமெரிக்க ஐக்கிய நாடுகளின் 16வது ஜனாதிபதியான ஆபிரகாம் லிங்கன் ஆண்டவருக்குப் பயந்தவராக இருந்தார். விடுதலைப் பிரகடனம் மூலமாக பல்லாயிரக்கணக்கான மக்களுடைய விடுதலைக்குக் காரணமாக விளங்கினார். அவருடைய பாரம்பரியம், பல சந்ததிகளுக்கு ஆசீர்வாதமாக விளங்குகிறது. தேவனால் உங்கள் மூலமாக என்ன செய்ய முடியும் என்று யோசித்துப்பாருங்கள்.

### நியாயத்தையும் நம்பிக்கையும் கொண்டு வருதல்

அரசியல் என்பது வெறுமனே அதிகாரத்தை குறிப்பதல்ல. அது, நியாயத்தின் தளமாக இருக்கிறது. ஒடுக்கப்பட்டவர்கள், குரலற்றவர்கள், விளிம்பு நிலை மக்களுக்காக தேவனுடைய இருதயம் துடிக்கிறது. அவர் ஆபிரகாம் லிங்கனை பயன்படுத்தி, ஆப்பிரிக்க அமெரிக்கர்களுக்கு உயர்வை கொடுத்ததுபோல, ஏழைகளுடைய உரிமைகளுக்காக, தேவையிலுள்ள மக்களுக்காக, குரலற்றவர்களுக்காக போராட, உங்களை அவரால் பயன்படுத்த முடியும்.

### அரங்கை விலக்காதிருங்கள்

அரசியல் மொத்தமே கறை படிந்தது என்று கூறினால், மீட்பினுடைய சக்தியை நாம் அலட்சியம் பண்ணுவதாக அமையும். அமைப்புகள் உடைந்திருக்கலாம்; ஆனால், தேவன் அவற்றை புதுப்பிக்கவும் சீர்ப்படுத்தவும் மக்களைப் பயன்படுத்துகிறார். தேவன், தேசங்களை போஷிக்க யோசேப்பை பயன்படுத்தினார்; தமது ஜனங்களை பாதுகாக்க தாவீதைப் பயன்படுத்தினார்; அடிமைகளை விடுவிக்க லிங்கனைப் பயன்படுத்தினார். அதேபோல உங்கள் தலைமுறையில் மாற்றத்தைக் கொண்டு வர, உங்களைப் பயன்படுத்த முடியும்.

ஆகவே, அரசியலை விலக்காதிருங்கள். தேவன் உங்களை அதற்குள் அழைத்தால், அதைவிட்டு ஓடாதிருங்கள். அதை ஏற்றுக்கொள்ளுங்கள். அதை சொந்தம் கொண்டாடுங்கள். தேவனுடைய வெளிச்சம் உங்கள் மூலமாக பிரகாசிக்கட்டும். ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக.





## கோடிக்கணக்கான ஜனங்களின் கண்ணீர் துடைக்கப்படும்படி இயேசு அழைக்கிறார் ஊழியத்தைத் தாங்குவதற்கான வழிகள்

**வங்கி மூலம் :**

IndusInd Bank
Beneficiary Name: **JESUS CALLS**
Account No.: **555444333222111**
Bank: **IndusInd Bank, Rajaji Salai Branch, Chennai - 600001.** IFS Code: **INDB0000167**

ICICI Bank
Beneficiary Name: **JESUS CALLS**
Account No.: **000901056144**
Bank: **ICICI Bank Ltd., Nungambakkam Branch, Chennai 600 034.**
IFS Code: **ICIC0000009**

*BANK TRANSFER DETAILS CAN BE INTIMATED: partnercare@jesuscalls.org*

QR Code-ஐ ஸ்கேன் செய்து அனைத்து UPI செயலிகள் மூலமும் தாங்கலாம்.

Paytm G Pay BHIM

**SCAN TO PAY**

UPI ID **jesuscalls@indus**

நீங்கள் வங்கி பரிமாற்றம் மற்றும் வங்கிகளின் செயலிகள் (Apps) மூலமாக நன்கொடை அனுப்பினால், தயவுசெய்து அதைக் குறித்த விவரங்களை உடனே **98409 99923** என்ற எண்ணுக்கு எஸ்எம்எஸ் அல்லது வாட்ஸ்அப் வாயிலாக எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உங்களுக்காக நாங்கள் ஜெபிக்கவும், உங்கள் நன்கொடை வந்து சேர்ந்ததற்கான ஒப்புதலை உங்களுக்கு தெரியப்படுத்தவும் அது உதவும்.

மணியார்டர் (EMO) மற்றும் 'JESUS CALLS' என்ற பெயரில் டிமாண்ட் டிராப்ட் / காசோலை (CTS) எடுத்து, ஜெப கோபுரம், 16, டி.ஜி.எஸ். தினகரன் சாலை, சென்னை - 600 028 என்ற முகவரிக்கு அனுப்பலாம்.

உங்கள் பகுதியிலுள்ள ஜெப கோபுரத்திற்கு நேரில் சென்றும் தாங்கலாம்

# வரங்களின் மூலம் மக்களுக்கு இயேசுவைக் காட்டுங்கள்

ஸ்டெல்லா ரமோலா



வாலிபர் பகுதி

அன்பானவர்களே, தேவன் உங்களுக்கு கொடுத்திருக்கிற வரத்தைக் குறித்து சிந்திக்கவும், அதன் மூலமாக மற்றவர்களுக்கு எப்படி ஊழியம் செய்யலாம் என்றும், மக்களுக்கு இயேசுவை எப்படி காட்டலாம் என்றும் சிந்திக்கும்படி உங்களை அழைக்கிறேன்.

**''வரங்களில் வித்தியாசங்கள் உண்டு, ஆவியானவர் ஒருவரே. ஊழியங்களிலேயும் வித்தியாசங்கள் உண்டு, கர்த்தர் ஒருவரே. கிரியைகளிலேயும் வித்தியாசங்கள் உண்டு, எல்லாருக்குள்ளும் எல்லாவற்றையும் நடப்பிக்கிற தேவன் ஒருவரே. ஆவியினுடைய அநுக்கிரகம் அவனவனுடைய பிரயோஜனத்திற்கென்று அளிக்கப்பட்டிருக்கிறது''**
**(1 கொரிந்தியர் 12:4-7)**

ஆம்! தேவன் நமக்கு தாலந்துகளையும் திறமைகளையும் கொடுத்து ஆசீர்வதிப்பதோடு மட்டுமல்ல, அவர் நமக்கு ஆவிக்குரிய வரங்களையும், ஒவ்வொரு விசுவாசிக்கும் விசேஷித்த வண்ணம் வழங்குகிறார். நம்முடைய சரீரத்தின் ஒவ்வொரு அங்கத்திற்கும் ஒரு குறிப்பிட்ட வேலை இருப்பதுபோல, தேவனுடைய ஜனங்களுக்கும் குறிப்பிட்ட வேலை இருக்கிறது. நமது ஆவிக்குரிய வரங்கள், பக்திவிருத்தியுண்டாக்கவும், பெலப்படுத்தவும், மற்றவர்களுக்கு உதவிடும் ஊழியம் செய்யவும் கொடுக்கப்படுகிறது. அது தனிப்பட்ட லாபத்திற்கும், அங்கீகாரத்திற்கும் கொடுக்கப்படாமல், அதைவிட அதிக நன்மையான காரியங்களுக்கும், ஆண்டவரை மகிமைப்படுத்துவதற்கும் கொடுக்கப்படுகிறது.

இந்த உலகத்தில் நம்பிக்கைக்கும், குணப்படுவதற்கும் மக்கள் ஏங்கி தேவனுடைய அன்பை நாடுகிறார்கள். இப்போது உங்கள் வரங்கள் அத்தியாவசியமாகிறது. சில நேரங்களில் நாம் தேவனுடைய ஈவுகளை, வரங்களை நம்முடைய சொந்த பிரச்னைகளை சரிசெய்வதற்கு, இல்லையென்றால் நம்முடைய சொந்த பலவீனங்களை நீக்குவதற்கு பயன்படுத்துகிறோம். ஆனால் வேதம், நம்முடைய வரங்கள் மற்றவர்களுக்கு ஊழியம் செய்வதற்கு உரியது என்று தெளிவாக கூறுகிறது (1 பேதுரு 4:10).

அதே சத்தியத்தை, **''அடையாளங்களினாலும் அற்புதங்களினாலும் பலவிதமான பலத்த செய்கைகளினாலும், தம்முடைய சித்தத்தின்படி பகிர்ந்து கொடுத்த பரிசுத்த ஆவியின் வரங்களினாலும், தேவன் தாமே சாட்சிகொடுத்ததுமாயிருக்கிற இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக்குறித்து நாம் கவலையற்றிருப்போமானால் தண்டனைக்கு எப்படித் தப்பித்துக்கொள்ளுவோம்''** என்று வேதம் கூறுகிறது (எபிரெயர் 2:4). தேவன் தம்முடைய ஜனங்களை, தம்முடைய அன்பை ஆவிக்குரிய வரங்கள் மூலம் காட்டுவதற்கு பயன்படுத்துகிறார்.

இந்த வரங்கள் மற்றவர்களை அவரிடத்தில் வழிநடத்துவதற்கும் அடையாளங்களையும் அற்புதங்களையும் அதிசயங்களையும், நம்முடைய மகிமைக்காக அல்லாமல் அவருடைய மகிமைக்காக காட்டுவதற்கும் உதவுகிறது.

என்னுடைய தாத்தாவின் வாழ்விலிருந்து ஒரு சாட்சியை பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்.

*என்னுடைய தாத்தா முதலாவதாக கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டபோது, பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட வேண்டும் என்று அதிகமாக வாஞ்சித்தார். அவர் அதற்காக ஏழு வருடங்கள் ஊக்கமாக ஜெபித்து வந்தார். அவருடைய இருதயம், ''ஆண்டவரே, என்னை உம்முடைய ஆவியினால் நிறைத்து*

stellaramola@jesuscalls.org stellazlife

*அடையாளங்களையும் அற்புதங்களையும் இந்த தேசத்தில் உம்முடைய நாமத்தினால் செய்யவேண்டும்" என்று கேட்டது. ஆனால், தேவன் அவரை காத்திருக்கச் செய்தார். ஒரு நாள் மிகுந்த களைப்பின் மத்தியில், அவர் மறுபடியும் ஜெபித்தார். அன்று தேவன் அவருக்கு ஒரு பரலோக தரிசனத்தைக் கொடுத்தார். அந்த தெய்வீக அனுபவத்தில், அவர் சைக்கிளில் செல்லும்போது செய்த சிறு ஜெபத்தைக் கூட ஆண்டவர் அவருக்கு காண்பித்தார். அப்பொழுது, இயேசு அங்கு தோன்றி அவரை பிதாவாகிய தேவனுடைய சமுகத்தில், மகத்துவமான இடத்திற்கு அழைத்துச் சென்றார். மேகம் விலகியபோது, அந்தப் பிரகாசமான வெளிச்சத்தில் ஓர் இளம் வாலிபன் காணப்பட்டான். இடிமுழக்கத்தைப் போன்ற ஒரு சத்தம், "உனக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டது. என்னுடைய தாத்தா பேச முடியாதபடி இருந்தார். அவர் ஆவிக்குரிய வரங்களை கேட்பதற்கு வாஞ்சித்தார். ஆனால் அந்த குரல், "உனக்கு நான் வேண்டாமா?" என்று கேட்டது. அவருடைய கண்களில் கண்ணீர் நிரம்பியது. "ஆண்டவரே, எனக்கு நீர் மாத்திரம் வேண்டும். வேறு எதுவும் வேண்டாம்" என்று கூறினார். தேவன் அவருடைய உண்மையைக் கண்டார்; ஆவிக்குரிய வரங்கள் அவர் மூலமாக செயல்பட ஆரம்பித்தன. அவர் இன்னும் அதிக உண்மையாக ஆண்டவருக்கு ஊழியம் செய்ய ஆரம்பித்தார்.*

அன்பானவர்களே, என்னுடைய தாத்தாவைப் போல, நீங்களும் ஆண்டவரிடம் பொறுமையாக காத்திருந்து, பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெற்றுக்கொள்ள உங்களை ஊக்கப்படுத்துகிறேன். தேவன் உங்களை நிரப்பும்போது, உங்களுக்கு ஒன்றும் குறைவுப்படாது. ஆவியானவரே, உங்கள் பலமாயிருப்பார்; உங்கள் ஞானமாயிருப்பார்; உங்களுக்கு வேண்டியதைக் கொடுப்பார். நாம் தேவனைப் பெற்றுக்கொண்டால், எல்லாவற்றையும் பெற்றவர்களாக இருப்போம் என்பது சத்தியமாகும்.

### தேவன் நமக்குக் கொடுத்துள்ள இந்த வரங்களை நாம் எப்படிப் பயன்படுத்த முடியும்?

உங்களுடைய அழைப்பும் உங்களுடைய வரங்களும் இணைந்து செயல்படும். அழைப்பு என்பது ஆண்டவர் உங்கள் இருதயத்தின் ஆழத்தில் அவருக்கு ஊழியம் செய்ய வேண்டும் என்று வைக்கும் வாஞ்சையாகும். மற்றவர்களுக்கு ஊழியம் செய்யும்படி, அவருடைய ஆலயத்தைக் கட்டும்படி, அவருடைய அன்பை வெளிப்படுத்த உதவும் கருவிகளே அவர் கொடுத்த வரங்களாகும்.

ஒருவேளை உங்களுக்கு குழந்தைகளுக்குப் போதிக்கும் வரம் இருக்கலாம். ஏழைகளுக்கு உதவுகிற இருதயம் இருக்கலாம். நீங்கள் எழுதுவதில், பேசுவதில், இசை வாசிப்பதில் சிறந்திருக்கலாம். ஒருவேளை நீங்கள் இயற்கையாகவே தலைமைப் பொறுப்பு வகிக்கக்கூடியவராக இருக்கலாம்; இல்லையென்றால் பின்னணியில் செயல்படுகிறவராக இருக்கலாம். உங்கள் வரம் எதுவாக இருந்தாலும் தேவனால் அதைப் பயன்படுத்த முடியும். தனிப்பட்ட புகழுக்காக அல்ல; எந்த ஒரு மனிதனுடைய மகிமைக்காகவும் அல்ல; அவருடைய நாமத்தின் மகிமைக்கும், அவருடைய ராஜ்ஜியத்தைக் கட்டுவதற்குமே அது பயன்படுத்தப்பட வேண்டும். நீங்கள் சுகமான பகுதியை விட்டு வெளியே வந்து, உங்கள் வரங்களை பயன்படுத்த ஆரம்பிக்கும்போது தேவன் அதைப் பெருகச் செய்வார்.

அப்போஸ்தலர் 2:17, "**கடைசிநாட்களில் நான் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன், அப்பொழுது உங்கள் குமாரரும் உங்கள் குமாரத்திகளும் தீர்க்கதரிசனஞ்சொல்லுவார்கள்; உங்கள்**

> "நாம் தேவனை பெற்றிருந்தால் எல்லாவற்றையும் பெற்றிருப்போம்"

**வாலிபர் தரிசனங்களை அடைவார்கள்; உங்கள் மூப்பர் சொப்பனங்களைக் காண்பார்கள்**" என்று கூறுகிறது. இந்த வாக்குத்தத்தம் உங்களுக்குரியது. தேவன் உங்களை தமது ஆவியினால் நிரப்பி, மற்றவர்களுக்கு ஊழியம் செய்வதன் மூலம், அவருடைய மகிமையைச் செல்லும் இடமெல்லாம் வெளிப்படுத்துவதற்கு உதவுகிறார். நீங்கள் தீர்க்கதரிசனம் உரைக்க அழைக்கப்பட்டிருக்கலாம். உலகத்தை இயேசுவின் இரண்டாம் வருகைக்கு ஆயத்தப்படுத்த அழைக்கப்பட்டிருக்கலாம். இல்லையென்றால் ஆண்டவரின் இருதயத்தை பிரதிபலிக்கும் வாழ்க்கை வாழ அழைக்கப்பட்டிருக்கலாம்.

நீங்கள், மற்றவர்களுக்காக வாழ ஆரம்பிக்கும்போது, அவர்களுக்கு ஊழியம் செய்யும்போது, உங்கள் சொந்த வாழ்க்கையிலுள்ள வெறுமை மறைந்துபோகும். வனாந்தரம் ஜீவத் தண்ணீரால் நிரம்பும்.

தேவன் தமது ஆவியை உங்கள்மேல் ஊற்ற ஆயத்தமாயிருக்கிறார். அவரைப் பெற்றுக்கொள்ள நீங்கள் ஆயத்தமா? அவருடைய ஊழியத்திற்கென்று உபயோகிக்கப்பட தயாராக இருக்கிறீர்களா? அவரிடம் 'ஆம்' என்று சொல்லுங்கள். அப்போது உங்கள் வாழ்க்கையை அவர் எப்படி மாற்றுகிறார்; எப்படி உங்களைப் பயன்படுத்துகிறார் என்று காண்பீர்கள்.



# கர்த்தரை நம்பியிருக்கிறவனையோ கிருபை சூழ்ந்துகொள்ளும்!

சங்கீதம் 62:8-ல், "ஜனங்களே! எக்காலத்திலும் அவரை நம்புங்கள்; அவர் சமுகத்தில் உங்கள் இருதயத்தை ஊற்றிவிடுங்கள்; அவர் நமக்கு அடைக்கலமானவர்" என்று வேதம் தெளிவாக நமக்கு போதிக்கிறது. தேவனுக்கு பிரியமான வழிகளில் வாழ்ந்து வந்த தாவீது, தேவன்மீது இந்தவிதமாக தன் முழு நம்பிக்கையையும் கொண்டிருந்தான். சங்கீதம் 23-ல், தேவன்மீது அவன் வைத்திருந்த நம்பிக்கையைக் குறித்து நாம் தெளிவாகப் பார்க்கிறோம். கர்த்தரை தன் முழு நம்பிக்கையாகக் கொண்டதினிமித்தம், எப்படியாக அவன் தன் வாழ்நாளில் ஆசீர்வாதம் பெற்றான் என்பதை அவனே மிகவும் அழகாக விவரித்திருக்கிறான். 1 நாளாகமம் 29:28-ல் வாசிப்பதுபோன்று, அவன் வாழ்வின் முடிவுபரியந்தம் வரைக்கும் அவன் கர்த்தரை நம்பியிருந்தபடியால், தேவ கிருபை எவ்வளவாய் அவனை சூழ்ந்திருந்தது! இத்தகைய தெய்வீக ஆசீர்வாதங்களை தாவீது எவ்வாறு பெற்று ஆசீர்வாதம் பெற்றான் என்பதை பார்ப்போமா?

### 1. கர்த்தருக்கு பயப்படுகிறவனுக்கு திடநம்பிக்கை உண்டு!

(நீதிமொழிகள் 14:26)

கர்த்தருக்கு பயப்படுதலை வாழ்க்கையின் அஸ்திபாரமாய் கொள்கிறவர்களுக்கு கர்த்தர்மீது திடநம்பிக்கையும் எளிதாக வரும். என் வாழ்க்கையில், என்னுடைய வாலிப வயது வரையிலும் நான் கர்த்தருக்கு பயப்படும் பயத்தை அறியாதிருந்தேன். அவர்மீது எனக்கு நம்பிக்கையும் அவ்வளவாக இல்லாதிருந்தது. ஆனால், அன்பின் திருவுருவமாகிய ஆண்டவரோ என்மீது மிகுந்த கிருபை நிறைந்தவராக, என் வாழ்வின் திருமண நிச்சயதார்த்த வைபவத்தின்போது, போதகர் மூலமாக நீதிமொழிகள் 31-ம் அதிகாரம், 10 முதல் 31 வரையுள்ள வசனங்களை வாசிக்கக் கேட்டபொழுது, கர்த்தர் என்னோடு தெளிவாகப் பேசினார். சங்கீதம் 32:8-ல் வாசிக்கிறபடியே, அந்த வசனங்களின் மூலம் தொடர்ந்து கர்த்தர் எனக்கு தகுந்த ஆலோசனைகளைத் தந்து, தெய்வ பக்தியினால் நிறைந்த தெய்வீக வாழ்வை எனக்கு அருளிச்செய்து, இன்றுவரை அவரே என்னை கரம்பிடித்து வழிநடத்தி வந்திருக்கிறார். இதினிமித்தம், நான் கர்த்தருடைய துணையோடு கூட அவருடைய ஊழியத்தை பயபக்தியோடு நிறைவேற்றவும், பெண்கள் பலருடைய ஜெப வாழ்வில் கர்த்தருடைய ஆசீர்வாதத்தைக் கொண்டு வரவும், கர்த்தர் தமது கிருபையினால் என்னை மிகவும் ஆச்சரியமான விதத்தில் வழிநடத்தி வருகிறார்.

எனக்கு அருமையானவர்களே! நீங்களும் கர்த்தருக்கு பயப்படும் பயத்தோடுகூட அவரை உண்மை மனதோடு தேடுங்கள். அப்பொழுது,

**"கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையும் குறைவுபடாது"** (சங்கீதம் 34:10)

என்ற வேத வசனத்தின்படியே, கர்த்தர்மீது நம்பிக்கை வைத்து, அவரை தேடுகிற உங்களுக்கு, அவரே நிறைவான நன்மைகளைத் தந்து, தெய்வீகம் நிறைந்த

ஆசீர்வாதமான வாழ்வு வாழ கிருபை புரிவார்.

## கர்த்தரை நம்புவோருக்கு அவர் உண்டுபண்ணி வைத்திருக்கிற பெரிதான நன்மை!

(சங்கீதம் 31:19)

சங்கீதம் 85:12-ல், "கர்த்தர் நன்மையானதைத் தருவார்" என்று வாசிக்கிறோம். இஸ்ரவேல் மருத்துவச்சிகள் தேவனுக்கு பயந்து, அவர்மீது தங்கள் முழு நம்பிக்கையையும் வைத்து நிறைவான பாக்கியம் பெற்றார்கள் என்று வேதம் கூறுகிறது.

**"இதினிமித்தம் தேவன் மருத்துவச்சிகளுக்கு நன்மை செய்தார். இஸ்ரவேல் ஜனங்கள் பெருகி மிகுதியும் பலத்துப்போனார்கள். மருத்துவச்சிகள் தேவனுக்கு பயந்ததினால், அவர்களுடைய குடும்பங்கள் தழைக்கும்படி செய்தார்"**

(யாத்திராகமம் 1:20,21)

இன்றைக்கு குடும்ப வாழ்வில் கர்த்தர் அருளும் தெய்வீக சமாதானம், சந்தோஷம், பாக்கியமுள்ள வாழ்வு இவைகளை பெற்றுக்கொள்ள முடியாமல், பல்வேறு பாடுகள், உபத்திரவங்கள் நிமித்தம் சோர்ந்துபோய் கண்ணீரில் வாழ்கிற குடும்பத்தின் மக்கள், விசேஷமாக பெண்கள் ஏராளம் பேர் இருக்கின்றனர். அவர்கள் வாழ்வு இருளில் வசிப்பதுபோன்று அந்தகாரம் நிறைந்ததாகக் காணப்படுகிறது. ஆனால், கர்த்தர்மீது நம்பிக்கையை வைத்து, அவரை முழு இருதயத்தோடும் தேடி, பயபக்தியோடு வாழ்கிறவர்களுக்கோ, அத்தகைய இருளின் மத்தியில், வெளிச்சத்தைக் காண்கிறவர்களாக, அவர் அருளும் தெய்வீக சந்தோஷம், சமாதானத்துடன் வாழும் கிருபையை அவர் அருளிச்செய்வார்!

தேவனோடு நெருங்கி வாழ்ந்த ஆபிரகாமின் வாழ்க்கையைப் பாருங்கள், அவன், "இல்லாமை" என்ற குறைவுடன் வாழும்படி நேர்ந்தது. ஆம்! குழந்தை பாக்கியம் இல்லாத நிலையிலும், அவன் தேவன்மீது எப்படிப்பட்ட விசுவாசம் வைத்திருந்தான் பாருங்கள்! ரோமர் 4:17-ன்படி, "இல்லாதவைகளை இருக்கிறவைகளைப் போல் அழைக்கிறவராயிருக்கிற தேவன்" என்று விசுவாசித்தான். தேவனுடைய வாயிலிருந்து புறப்பட்ட வாக்குத்தத்தமே அவனுக்கு அப்படிப்பட்ட விசுவாசத்தைக் கொடுத்தது.

குழந்தையில்லாத வெறுமை நிலையில் கர்த்தர் அவனுக்கு அருளிய வாக்குத்தத்தம், "நான் உன்னை திரளாய் பெருகப்பண்ணுவேன்; நீ திரளான ஜாதிகளுக்கு தகப்பனாவாய்" (ஆதியாகமம் 17:5) என்பதேயாகும்! ரோமர் 4:18-ன்படி, ஆபிரகாம், தான் அநேக ஜாதிகளுக்கு தகப்பன் ஆவதை நம்புகிறதற்கு ஏதுவில்லாதிருந்தது. காரணம், அவனும், அவன் மனைவி சாராளும் வயதில் முதிர்ந்திருந்தார்கள். அவன் மனைவிக்கு ஸ்திரீகளுக்குள்ள வழிபாடும்கூட நின்றுபோயிருந்தது. அப்படியானால், அவள் அதற்குப் பிறகு கர்ப்பம் தரிக்க வாய்ப்பே இல்லை. ஆனால், ரோமர் 4:18-21 வரையுள்ள வசனங்களை வாசித்துப் பார்ப்போமானால், அந்த வெறுமை நிலையிலும் ஆபிரகாம் கர்த்தர்மேல் வைத்திருந்த உறுதியான விசுவாசம் அவனுடைய வாழ்வையே தலைகீழாக மாற்றியது. கர்த்தர் அருளிய நன்மைகளால் நிரப்பி, சாட்சியாக மாற்றி வைத்தது என்பதை அறியலாம். குழந்தையில்லாத அவனுடைய சந்ததி எப்படியாய் பெருகியது என்பதை மத்தேயு 1:1-17 வரையுள்ள வசனங்களில் வாசிக்கலாம்.

அன்பானவர்களே, உங்களது வாழ்விலும் ஆபிரகாமைப்போல பல்வேறு இல்லாமைகளால் நிரம்பியிருப்பீர்களானால், நீங்களும் வேத புத்தகத்தைத் திறந்து, கர்த்தருடைய வாக்குத்தத்தங்களை கவனமாக வாசித்து, அதை உங்களுக்கென்று சொந்தமாக்கிக் கொள்ளுங்கள். அப்பொழுது நீங்களும், ஆபிரகாம் தன் விசுவாசத்தினால் பெற்றுக்கொண்ட நன்மைகளால் நிரம்பி மகிழும் பாக்கியத்தை கர்த்தர் உங்கள் வாழ்விலும் நிச்சயமாகத் தருவார்.

## கிறிஸ்து மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள் இருப்பதே அந்த இரகசியம்

(கொலோசெயர் 1:27)

ஆம் பிரியமானவர்களே, நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மகிமையின் நம்பிக்கையாக நமக்குள் வந்து வசிப்பது எத்தனை பாக்கியமும் சிலாக்கியமும் நிறைந்த தான வாழ்க்கை என்பதை சற்று சிந்தித்துப் பாருங்கள். இத்தகைய "நம்பிக்கை நிறைந்த வாழ்வு" எப்படிப்பட்டதாயிருக்கும்! பிலிப்பியர் 3:3-ல் வாசிப்பதுபோன்று இது, மாம்சத்தின்மேல் நம்பிக்கையாயிராமல், ஆவியினாலே தேவனுக்கு ஆராதனை செய்து, கிறிஸ்துவுக்குள் மேன்மை பாராட்டுகிற தெய்வீக வாழ்க்கையாயிருக்கும். இதைத்தான், ரோமர் 8:30-ல், "தேவன் எவர்களை நீதிமான்களாக்கினாரோ, அவர்களை மகிமைப்படுத்தியிருக்கிறார்" என்றும் வாசிக்கிறோம். 1 பேதுரு 4:14-ல், தேவனுடைய ஆவியாகிய மகிமையுள்ள ஆவியானவர் உங்கள்மேல் தங்கியிருக்கிறார் என்று வாசிக்கிறோம். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சிலுவையில் மரணத்தை ஜெயித்து



**கர்த்தர்மீது நம்பிக்கை வைத்து, அவரை முழு இருதயத்தோடு தேடி, பயபக்தியோடு வாழ்கிறவர்களுக்கு, தெய்வீக சமாதானத்துடன் வாழும் கிருபையை அவர் அருளுகிறார்**

உயிரோடு எழுந்தபின், தம்முடைய சீஷர்களுக்கும், தம்மோடு முடிவுபரியந்தம் கூடவே இருந்த அனைவருக்கும், அப்போஸ்தலர் 1:4,5 ஆகிய வசனங்களின்படி தெளிவாகப் போதித்தார். அவ்வாறே அவர்களும், கர்த்தருடைய சந்நிதியில் (அப்போஸ்தலர் 1:14) பயபக்தியோடும், நம்பிக்கையோடும் ஜெபத்தில் காத்திருந்தபொழுது, அந்த தெய்வீக மகிமையினால் நிரப்பப்பட்டார்கள் என்று பார்க்கிறோம். விசேஷமாக, அவருடைய சீஷர்களின் வாழ்க்கை அதன்பின்பு முற்றிலுமாக மாறிப் போனது. இயேசுவைப் போன்றே அவர்களும் தெய்வீக வல்லமையினால் நிறைந்து அநேகருக்கு ஆசீர்வாதமாக மாறினார்கள்.

பிரியமானவர்களே, இன்று நாமும்கூட அதே வண்ணமாக அவருக்கென்று நம் வாழ்வை முற்றிலுமாக பயபக்தியுடன் அர்ப்பணிக்கும்பொழுது, இதே தெய்வீக மேன்மையும், மகிமையும் நிறைந்த வாழ்வை தேவன் நமக்கும் நிச்சயம் கொடுப்பார்.

**“பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரம பிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்கு பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிகநிச்சயம் அல்லவா என்றார்”**

(லூக்கா 11:13)

என்று வாசிக்கிறபடியே, வேதத்தை கருத்தாய் வாசித்து, இந்த சத்தியத்தை அறிந்துகொள்கிற யாராயிருந்தாலும், கர்த்தரை நோக்கி வேண்டுதல் செய்யும்பொழுது, தாம் பெற்ற அந்த தெய்வீகமான பரிசுத்த ஆவியானவரை (அப்போஸ்தலர் 10:38) நமக்கும் நிச்சயம் அருளுவார்.

எங்கள் குடும்ப வாழ்வு, இத்தகைய விதமாக பரிசுத்த ஆவியின் நிறைவை பெற்றிருக்கிறதினிமித்தம் உலகம் தரக்கூடாத தெய்வீக சமாதானத்தினால் நிறைந்திருக்கிறது. பயங்கரமானதும், பெலவீனமானதுமான சூழ்நிலைகளில், “என்னை பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்கு பெலன் உண்டு” (பிலிப்பியர் 4:13) என்றபடியே, நாங்கள் கிறிஸ்துவுக்குள் பெலன் பெற்று, அவருக்கென்று மகிமை நிறைந்த தெய்வீக வாழ்வு வாழ ஆச்சரியமான விதத்தில் எங்களை வழிநடத்துகிறது.

எனவே பிரியமானவர்களே, இத்தகைய மேலான பாக்கியம் நிறைந்த தெய்வீக வாழ்வை பெற்றுக்கொள்ளத் தக்கதாக, நீங்களும் கர்த்தரை முற்றிலுமாய் இரட்சகராக ஏற்றுக்கொண்டு முழுமனதோடு அவரை நம்பி, நிறைவானதும் பாக்கியம் நிறைந்ததுமான வாழ்வை வாழ, தேவன் தாமே உங்கள் ஒவ்வொருவருக்கும் கிருபை புரிவாராக!






# இன்றைய இறை தியானம்

## ஜூலை - 2025

1
**பிலிப்பியர் 4:19 - குறைவுகள் நிறைவாகும்**
**தியானத்திற்கு:** உபா. 2:7; யோபு 5:24; 2 கொரி. 9:12; யாக். 1:4

2
**சங்கீதம் 18:19 - விசாலமான இடம்**
**தியானத்திற்கு:** 2 சாமு. 22:20; யோபு 36:16; சங். 118:5; ஆமோஸ் 9:6

3
**மத்தேயு 5:9 - சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்**
**தியானத்திற்கு:** நீதி. 16:7; ஏசாயா 55:12; ரோமர் 12:18; 2 கொரி. 13:11

4
**தானியேல் 12:3 - நீங்கள் பிரகாசிப்பீர்கள்**
**தியானத்திற்கு:** யாத். 34:29-35; நீதி. 4:18; மத். 5:14-16; 2 கொரி. 4:6

5
**ஏசாயா 60:22 - கர்த்தர் உன்னை பெரிய ஜாதியாக்குவார்**
**தியானத்திற்கு:** ஆதி. 12:2; 21:18; எண். 14:12; உபா. 9:14; மீகா 4:7

6
**லேவியராகமம் 26:11 - கர்த்தர் உங்களில் வாசஸ்தலத்தை ஸ்தாபிப்பார்**
**தியானத்திற்கு:** யாத். 25:8; 1 இராஜா. 8:12-14; சங். 132:13,14; வெளி 21:3

7
**யோசுவா 1:3 - கால் மிதிக்கும் இடத்தை தேவன் தருவார்**
**தியானத்திற்கு:** ஆதி. 13:14-17; உபா. 11:22-24; யோசுவா 14:9; எபி. 11:8

8
**சங்கீதம் 92:12 - நீதிமானின் ஆசீர்வாதம்**
**தியானத்திற்கு:** சங். 72:7; நீதி. 3:33; 10:6; ஏசாயா 3:10; மத். 25:46

9
**நீதிமொழிகள் 18:10 - கர்த்தரின் நாமம் பலத்த துருகம்**
**தியானத்திற்கு:** 1 சாமு. 13:6; 2 சாமு. 22:3; சங். 31:2; 61:3

10
**சங்கீதம் 2:8 - பூமியின் எல்லைகளை சொந்தமாக தருவார்**
**தியானத்திற்கு:** உபா. 19:9,10; நியா. 1:18; 1 நாளா. 4:10

11
**யோவான் 1:16 - கர்த்தருடைய பரிபூரணம்**
**தியானத்திற்கு:** சங். 78:25; நீதி. 3:10; அப்.4:33; யாக். 1:17

12
**மத்தேயு 5:13 - நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்**
**தியானத்திற்கு:** மாற்கு 9:49,50; லூக்கா 14:34; கொலோ. 4:6

13
**2 கொரிந்தியர் 2:15 - கிறிஸ்துவின் நற்கந்தம்**
**தியானத்திற்கு:** ஏசாயா 11:3; எசே. 20:41; 2 கொரி. 2:14; பிலி. 4:18

14
**ஏசாயா 43:1 - நீங்கள் கர்த்தருடையவர்கள்**
**தியானத்திற்கு:** லேவி. 20:26; உபா. 7:6; 14:2; எபி. 8:10; 1 பேதுரு 2:9

15
**ஆமோஸ் 3:7 - இரகசியத்தை வெளிப்படுத்துகிறார்**
**தியானத்திற்கு:** யோபு 11:6; லூக்கா 8:17; எபே. 3:3,6; கொலோ. 4:3

16
**யோவேல் 2:25 - இழந்ததைத் திரும்ப அளிப்பார்**
**தியானத்திற்கு:** ஆதி. 14:14-16; 1 சாமு. 30:8,19; யோபு 42:10-12; எரே. 30:3

17
**ஓசியா 14:6 - அலங்காரம்**
**தியானத்திற்கு:** சங். 132:18; சக. 9:16; யாக். 1:12; வெளி. 2:10

18
**ஏசாயா 32:15 - தேவன் தமது ஆவியை ஊற்றுவார்**
**தியானத்திற்கு:** லூக்கா 11:13; அப். 2:17,18; தீத்து 3:7

19
**எரேமியா 32:41 - நன்மை செய்யுங்கள்**
**தியானத்திற்கு:** உபா. 6:19; 2 நாளா. 31:20; மத். 5:44; 1 தெச. 5:15

20
**1 பேதுரு 1:8 - சந்தோஷப்பட்டு களிகூருங்கள்**
**தியானத்திற்கு:** ஏசாயா 62:2-5; யோவேல் 2:23; ஆபகூக் 3:17,18; லூக்கா 1:46-48

21
**எரேமியா 32:27 - யாவருக்கும் தேவனாகிய கர்த்தர்**
**தியானத்திற்கு:** யாத். 6:7; எண். 15:41; யோவேல் 2:27; யோவான் 1:12,13

22
**ஏசாயா 41:13 - பயப்படாதிருங்கள்**
**தியானத்திற்கு:** ஆதி. 15:1; யாத். 14:13; 2 நாளா. 20:15-17; மத். 14:22-27

23
**ஏசாயா 50:4 - கர்த்தருடைய வார்த்தை**
**தியானத்திற்கு:** 1 இராஜா. 17:24; சங். 33:4; எரே. 23:29; லூக்கா 11:28

24
**எரேமியா 15:16 - சந்தோஷமும், மகிழ்ச்சியும்**
**தியானத்திற்கு:** நெகே. 12:43; ஏசாயா 35:10; 51:3,11; லூக்கா 1:14

25
**எரேமியா 17:8 - நீங்கள் செழிப்பீர்கள்**
**தியானத்திற்கு:** 1 நாளா. 4:40; சங், 66:12; நீதி. 11:25; அப். 14:17

26
**ஏசாயா 30:21 - வழி காட்டுபவர்**
**தியானத்திற்கு:** நெகேமியா 9:19; சங்கீதம் 31:3; 32:8; எரேமியா 42:2

27
**உன்னதப்பாட்டு 2:4 - நேசம்**
**தியானத்திற்கு:** நீதிமொழிகள் 6:19; உன்னதப்பாட்டு 1:2; 4:10

28
**ஏசாயா 30:15 - நம்பிக்கையின் பெலன்**
**தியானத்திற்கு:** சங்கீதம் 28:7; ஏசாயா 12:2; ரோமர் 15:13

29
**நீதிமொழிகள் 22:11 - சுத்த இருதயம்**
**தியானத்திற்கு:** சங். 51:10; அப். 15:9; யாக். 4:8; 1 பேதுரு 1:22

30
**ஏசாயா 25:4 - நெருக்கப்படுகிறவனுக்குத் திடன்**
**தியானத்திற்கு:** 1 சாமு. 30:6; சங். 9:9; எரே. 16:19; 2 கொரி. 4:8

31
**நீதிமொழிகள் 21:20 - வாசஸ்தலம்**
**தியானத்திற்கு:** யாத். 40:28-34; ஏசாயா 32:18; எசே. 37:27




**இன்றைய ஆசீர்வாதத்திற்காக Dr. பால் தினகரன் மற்றும் குடும்பத்தினர் இந்த சத்தியத்தை விளக்கி ஜெபிப்பதைக் காணுங்கள்**

இணையதளம் : www.jesuscalls.org
ஃபேஸ்புக்: Jesus Calls Tamil
யூடியூப்: JesusCalls சப்ஸ்கிரைப் செய்திடுங்கள்

ஃபேமிலி சேனல் மொபைல் செயலி
ஃபேமிலி சேனல்: இணையதளத்தில் www.familychannel.org

சிறுவர் பகுதி



# ஜிம் & ஜெமி

## காயப்படுத்தும் வார்த்தைகளும், குணப்படுத்தும் வார்த்தைகளும்
















**கதையின் நீதி:**

காயப்படுத்தும் வார்த்தைகளைப் பேசாமல் ஆறுதல் அளிக்கும் வார்த்தைகளைப் பேசுவோம். கர்த்தர் கவனித்துக்கொண்டிருக்கிறார்.

மனப்பாட வசனம்: **"இனிய சொற்கள் தேன்கூடுபோல் ஆத்துமாவுக்கு மதுரமும், எலும்புகளுக்கு ஔஷதமுமாகும்"**
நீதிமொழிகள் 16:24

JESUS CALLS
PRAYING FOR THE WORLD

# WE'RE HIRING

**COME JOIN US FOR A HEARTWARMING MISSION**

*These are some of the job positions available at Jesus Calls. We invite you to apply or refer.*

**FOR THE FULL LIST OF POSITIONS, PLEASE VISIT www.jesuscalls.org**

## PRAYER TOWERS

### HEAD - FIELD PRAYER MINISTRY
**Experience:** 25+ years in management **Skills Required:** Leadership and Governance / operational and systems planning and implementation / business development / strategy / team management / marketing skill / PR and networking / fundraising and cost control / digital management / anointed prayerful person.

### SENIOR MANAGER - UTURN & KIDS MINISTRY
**Skills required:** Children & Youth spiritual empowerment / creating and managing events / organizing Kids & youth camps / regular meetings in Prayer Towers / promotions /Content for TV and social media programs / public speaker / Capacity to develop innovative and creative approaches to youth ministry / raising Youth volunteers / networking / willing to travel passionate.

### SENIOR MANAGER – INSTITUTION AND CHURCH RELATIONS (ICR)
**Experience:** 15+ years **Skills Required:** Church networking / Institutional partnerships / Denominational relationship building / Ministry collaboration / Christian leadership engagement / Strategic outreach planning / Proposal writing / Communication and negotiation / Event coordination / Cross-functional coordination / Spiritual maturity and ministry understanding

### REGIONAL MANAGER
**Age:** Above 45 yrs. **Experience:** Above 20 yrs. **Location:** Across India **Skills required:** Monitor the region / Motivate Team / Develop Branch Performance / Review MIS / Aggressive / Analytical / Marketing / Fundraising / Conversant with Prayer-related activities / Decision Making / Partnership building / Interpersonal Relationship / Fluent in English & Local Language.

### MANAGER - PRAYER TOWER
**Age:** Above 40 yrs. **Experience:** Above 15 yrs **ROLE DESCRIPTION:** Spiritually strong and anointed / Prayerful / Team Management / Ability to manage all the prayer-related activities / Partnership building / Marketing / Fundraising / Interpersonal Skills / Aggressive / Decision Making /Team player / Serve with compassion and excellence / Fluent in English & Local Language.

### PRAYER INTERCESSOR
**Age:** 35 yrs and above, should be Married. **Education:** Any degree **ROLE DESCRIPTION:** Spiritually strong / Compassionate / Prayerful / Holistic care / Counselling / Sound Biblical Knowledge / Gifts of the Holy Spirit / Worship / Partnership building / Fluent in English & Local Language.

### HEAD - TRAINING
**Skills Required:** Training & Development Strategy / Curriculum & Content Development / Leadership & Team Management / Spiritual & Biblical Knowledge / Strong Communication & Interpersonal Skills / Multilingual Proficiency (Preferred) / Analytical & Assessment Skills / Digital Learning & Training Technologies / Event & Workshop Facilitation.

### SR. MANAGER - SECURITY
**Skills required:** Security planning for key personnel and for properties / Risk Assessment and Management / Crisis and Emergency Response / liaison with police and Government / Surveillance and Technology Proficiency / cybersecurity / office security protocol management / event security protocol.

## MEDIA & SOCIAL MEDIA

### HEAD MEDIA
**Skills Required:** Knowledge of Media platforms (TV, Social Media, OTT, TV App) / Program selection and review / Slot management / Digital Marketing / Broadcast and streaming / Distribution / Networking and Liaisoning in industry / Promotions / marketing and fundraising / branding / Infrastructure planning and management / Team management / finance planning and management / knowledge in media technologies

### SENIOR MANAGER - DIGITAL MEDIA OPERATIONS
**Skills required:** Content Planning and Management / Social Media Strategy and Campaign Execution / SEO and SEM Expertise / Data Analytics and Performance Metrics / Website and Mobile App Management / Cross-Platform Integration (web, social media, email, etc.) / Budget Management and ROI Analysis / Trend Analysis and Adaptation to Digital Changes.

### SENIOR MANAGER – TV CHANNEL OPERATIONS
**Experience:** 15+ years **Skills Required:** Broadcast operations management / Satellite uplink coordination / Program scheduling and traffic management / Technical team leadership / Viewer analysis and audience insight reporting / Regulatory compliance (TRAI, MIB) / Vendor and service provider coordination / Content quality control / Budgeting and cost optimization / Live and recorded telecast planning / Signal monitoring and troubleshooting / Workflow and process streamlining / Crisis management / Strategic planning and execution / Coordination with production and editorial teams

### PRODUCERS
**Language:** Tamil/Hindi/Telugu/Malayalam/Kannada. **Experience:** 2+ yrs relevant experience. **Location:** Chennai **Skills required:** Production Management / Creative / Script development / Technical expertise Mastery/ Creative Ideation/ Budget Management / Post-Production familiarity / social media / Live Broadcast Leadership / Promotions Strategy.

### VIDEO EDITOR
**Language:** Hindi/ Malayalam/Telugu/English **Location:** Chennai
**Skills required:** Experienced in visual editing on FCP 10.0, Adobe CC Premiere - Adobe After Effects - Photoshop CC 2021 / Video composition / Transition / colour correction / Visual effects / music and audio sweetening / camera operation.

## PARTNER SERVICES

### HEAD - PARTNER SERVICES
**Experience:** 20+ years **Skills Required:** Marketing / Segmentation / Promotions and Fundraising / Product and services placement and positioning / Outbound calling / Strategic thinking / Data enrollment and enrichment / Team management / Cost control / Data analysis and MIS.

### MANAGER – E-MATRIMONY SERVICES
**Experience:** 10+ years **Skills Required:** Customer relationship management / Matrimonial portal operations / Digital marketing / Lead generation and conversion / Matchmaking coordination / Data privacy and user confidentiality / User engagement and support / Event planning (matchmaking meets) / Communication and interpersonal skills / Tech-savvy with web and app-based tools / Report generation and analytics

## FINANCE

### FINANCE CONTROLLER
**Exp:** 20+ years in financial administration **Skills Required:** Budgeting / cost control / process and services optimization / fundraising strategy / analytical skill / proficiency in finance softwares / fund and cost forecasting and planning / financial risk planning / MIS and reports.

## ADMINISTRATION

### HEAD - ADMIN
**Experience:** 15+ years **Skills required:** Leadership and Team Management / Budgeting and Resource Allocation / Office Operations Management / Project Management Expertise (including construction and infrastructure projects) / Vendor and Facilities Management / Technology Proficiency (MS Office, ERP, Automation Tools) / Cybersecurity Knowledge and Risk Management / Infrastructure Management (office space, utilities, etc.) / Financial Management and Cost Control / Time Management and Multi-tasking.

## HUMAN RESOURCES

### HEAD – PEOPLE & CULTURE
**Experience:** 15+ years **Skills Required:** Organizational development / HR strategy & policy implementation / Talent acquisition & onboarding / Performance management systems / Training & leadership development / Succession planning / Employee engagement & internal communication / Conflict resolution & employee relations / Statutory compliance & labour law knowledge / HR analytics.

**SUBMIT YOUR CV: careers@jesuscalls.org; WHATSAPP CV TO: 9360136417, 6381754522**
**PLEASE SHARE IT WITH THOSE WHO MAY BE BLESSED BY IT**

# இயேசு அழைக்கிறார் டி.வி.கிளப்பில் சேருங்கள்

## இதுவரை அறிவிக்கப்படாதோருக்கு *அறிவிப்போம்*

"நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்" (மாற்கு 16:15)

இயேசு அழைக்கிறார் தொலைக்காட்சி ஊழியத்தின் மூலம் தேவனுடைய அன்பையும் மறுரூபமாக்கும் வல்லமையையும் பல லட்சம் பேர் அனுபவிக்கின்றனர். மாதந்தோறும் 180க்கும் மேற்பட்ட தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் 8 தொலைக்காட்சிகள் மூலம் தமிழ், ஹிந்தி, தெலுங்கு, மலையாளம், சிங்களம் ஆகிய 5 மொழிகளில் சுவிசேஷம் தொலைதூரத்திலும் அண்மையிலும் உள்ள இல்லங்களுக்கு அறிவிக்கப்படுகிறது - நீங்களும் இதில் பங்கு பெறலாம்.

**உங்கள் பிறந்தநாள், ஒருவர் தன் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெறும் நாளாக இருக்கவேண்டும் என்று விரும்புகிறீர்களா?**

**உங்கள் திருமண நாள், கிறிஸ்துவின் அன்பால் உங்கள் வாழ்க்கை மாற்றம் பெறவேண்டுமென்று விரும்புகிறீர்களா?**

ஒரு டி.வி. நிகழ்ச்சியை விசேஷித்த நாள் அன்று ஸ்பான்சர் செய்ய (ரூ.30,000)அல்லது இணைந்து தாங்க (ரூ.10,000) நன்கொடை அளித்தால், ஒரு ஆத்துமா நித்திய காலமாய் விடுதலை பெற, ஓர் இதயம் குணம்பெற, ஒரு வாழ்க்கை புதுப்பிக்கப்பட உதவலாம். உங்கள் விசேஷித்த நாள் இன்னும் அர்த்தமுள்ளதாகட்டும். உடைந்த உள்ளங்களை தொட்டு நம்பிக்கையற்றோருக்கு நம்பிக்கை அளிக்கும் தேவனுடைய கரமாக விளங்குங்கள்.

உலகத்தின் முடிவுபரியந்தம் நற்செய்தியை அறிவிக்க எங்களோடு இணைந்திடுங்கள்.

### இயேசு அழைக்கிறார் தொலைக்காட்சி நிகழ்ச்சி மூலம் ஆசீர்வதிக்கப்பட்ட ஒருவரின் அனுபவம்

### சுகமும் ஆசீர்வாதமும்




நான் அரசுப் பள்ளியில் ஆசிரியையாக பணியாற்றுகிறேன். எனக்கு கணவரும், இரண்டு பிள்ளைகளும் இருக்கிறார்கள். 50 கி.மீ. தொலைவில் இருக்கும் பள்ளிக்கு நான் பணியிட மாற்றம் செய்யப்பட்டேன். கரடுமுரடான சாலையில் பயணித்ததால், என் முதுகெலும்பிலும் இடுப்பிலும் மிகுந்த வலி ஏற்பட்டது. நிற்கவோ, பாடம் சொல்லிக்கொடுக்கவோ, படுக்கவோ முடியவில்லை. மிகுந்த சலிப்பின் மத்தியில் நான் கடிதம் எழுதினேன்; ஜெப கோபுரத்தை தொடர்புகொண்டேன்; இயேசு அழைக்கிறார் தொலைக்காட்சி நிகழ்ச்சியை பார்த்தேன். ஒருநாள் தொலைக்காட்சி நிகழ்ச்சியின் இறுதியில் Dr. பால் தினகரன் ஜெபித்தபோது, தேவன் எனக்கு பரிபூரண சுகம் கொடுத்தார். நான் லஞ்சம் கொடுக்காமல் பதவி உயர்வுடன் பணியிட மாற்றம் வேண்டும் என்றும் ஜெபித்தேன். இப்போது என் வீட்டில் இருந்து 15 நிமிட பயண தூரத்தில் உள்ள பள்ளிக்கு பணியிடமாற்றம் கிடைத்துள்ளது. தேவன் உண்மையுள்ளவர்.

- **சிரோமணி மின்ச்**, அம்பிகாபூர், சத்தீஸ்கர்.



## இன்னொருவரின் ஆசீர்வாதத்திற்கு காரணமாகுங்கள்

**மேலும் விவரங்களுக்கு:**

ஜெப கோபுரம்: உங்கள் பகுதியில் இருக்கும் ஜெப கோபுரத்தை அணுகலாம்

இணையதளம்: www.jesuscalls.org மின்னஞ்சல்: tvs@jesuscalls.org

தொலைபேசி எண்: 9500127277

முகவரி: ஜெப கோபுரம், 16, Dr. டி.ஜி.எஸ். தினகரன் சாலை, சென்னை 600 028.

தொலைக்காட்சி நிகழ்ச்சியை ஸ்பான்சர் செய்ய / இணைந்து தாங்க நன்கொடை அனுப்பும் விவரங்களை இந்த இதழின் 17வது பக்கத்தில் காணலாம்.

Printed by G.L.B.Ernest and Published by G.L.B.Ernest on behalf of Jesus Calls and Printed at Rasi Graphics Private Limited, DP 69-71-A, Sidco Industrial Estate, Thirumazhisai, Poonamallee Taluk, Thiruvallur District. and published at 16, Dr. D.G.S. Dhinakaran Salai, Chennai - 28, Editor: G.L.B.Ernest

# Admissions 2025
*Closing Soon*



**Karunya**
DEEMED UNIVERSITY
SOLVING HUMAN PROBLEMS
NAAC Accredited A++

# INDIA'S TOP RANKED UNIVERSITY

KARUNYANS GET HIRED BY TOP MNC's FROM YEAR TWO

*JOIN KARUNYA NOW...*

**Accreditation:** NAAC A++ Grade · ACCA (B.Com and Management Programs) · NBA National Board of Accreditation (Engineering and Management Programs) · ICAR (B.Sc. (Hons.) Agriculture Program)

**Global Ranking:** THE World University Rankings 2025 1201-1500 Band

CATEGORY 1 Institution UGC GoI.

MERIT SCHOLARSHIPS FOR ELIGIBLE CANDIDATES*

GET UPTO 100% SCHOLARSHIP*

## Programs Offered at KARUNYA

### B.Tech.
- Aerospace Engineering
- Aerospace Engineering Spl. Unmanned Aerial Vehicles
- Aerospace Engineering Spl. Artificial Intelligence & Machine Learning
- Artificial Intelligence & Data Science
- Biomedical Engineering
- Biomedical Engineering Spl. Artificial Intelligence & Machine Learning
  *Powered by* PHOENIX Phoenix Medical Systems (P) Ltd. *– Advancing healthcare through innovation.*
- Biotechnology
- Biotechnology Spl. Genome Engineering & Technology
- Biotechnology Spl. Artificial Intelligence
- Biotechnology Spl. Medical Biotechnology
- Computer Science & Engg.
- Computer Science & Engg. Spl. Artificial Intelligence & Machine Learning
- Computer Science & Engg. Spl. Cyber Security
- Computer Science & Engg. (Artificial Intelligence)
- Computer Science & Engg. (Artificial Intelligence & Machine Learning)
- Computer Engineering
- Computer Engineering Spl. Cyber Security *in collaboration with* Google
- Electronics & Communication Engineering
- Electronics & Communication Engineering Spl. Artificial Intelligence & Machine Learning
- Electrical & Electronics Engg.
- Electrical & Electronics Engg. Engineering Spl. Artificial Intelligence & Machine Learning
- Food Processing & Engineering
- Food Processing & Engineering Spl. Internet of Things
- Mechanical Engineering
- Mechanical Engineering Spl. Artificial Intelligence & Machine Learning
- Robotics & Automation
- Robotics & Automation Spl. Artificial Intelligence & Data Science
- Robotics & Automation Spl. Artificial Intelligence & Machine Learning
  *with* FESTO *– Global Leader in Industrial Automation*

### M.Tech.
- Aerospace Engineering
- Biotechnology
- Biomedical Instrumentation
- Computer Science & Engg.
- Cyber Security
- Food Processing & Engineering
- Robotics & Automation
- Structural Engineering
- VLSI Design
- Integrated Water Resources Management (IWRN)
  *Offered in association with* SUEZ *– A global leader in water solutions.*

### B.Sc.
- Forensic Science
- Information Security & Digital Forensics
- Media Production & Digital Marketing

### B.Sc. (Hons.)
- Agriculture
- Geriatric & Palliative Care Technology
- Psychology
- Semiconductor Technology
  *Powered by* edveon® *– India's Chipset Innovator*
- Sports & Exercise Science

### M.Sc.
- Agriculture (Agronomy)
- Agriculture (Genetics & Plant Breeding)
- Artificial Intelligence & Data Science
- Horticulture (Fruit Science)
- Biotechnology
- Energy Science & Technology (Integrated) *in partnership with* AMARON
- Forensic Science
- Food Science & Technology
- Information Security & Digital Forensics

### B.Com.
- (Specialisation in Professional Accounting & Financial Technology)
- Online B.Com. (General)

### Management
- M.B.A. *with* ZOHO *Integration*
  *Gain real-world business skills using Zoho's leading enterprise tools*
- Online M.B.A.

### PG Diploma
- Medical & Analytical Laboratory Technology *in Association with* Microbiological Laboratory

**Karunya Institute of Technology and Sciences,**
Karunya Nagar, Siruvani Main Road, Coimbatore - 641 114. Tamil Nadu, India.
E-mail: admissions@karunya.edu • Website: www.karunya.edu
**Toll Free: 1800 88 99 888, 1800 42 54 300**
**For more details contact: 94425 03407, 94425 03422**

APPLY NOW!
Scan QR Code to Start the Admission Process

*Conditions apply

REGISTERED NEWSPAPER RNI No.TNTAM/2003/10418




தேவ செய்தியும் ஜெபமும்: Dr. **பால் தினகரன்** மற்றும் குடும்பத்தினர்

# பெதஸ்தா
# ஆசீர்வாத கூட்டம்

உங்கள் வாழ்வில் ஓர் அற்புதத்தின் நாள்

**இடம்:**

**Dr. டி.ஜி.எஸ். தினகரன் மையம்**
**காருண்யா நகர்**
**கோயம்புத்தூர் - 641 114.**

வெளியூரிலிருந்து வருகிறவர்களுக்கு தங்கும் வசதிகள் முன்பதிவின் அடிப்படையில் செய்யப்படும்.

செய்திகள் தெலுங்கு, கன்னடம், மலையாளம் மற்றும் ஹிந்தி மொழிகளில் மொழிபெயர்க்கப்படும்.
கோயம்புத்தூர் - பெதஸ்தா, காருண்யா நகர் இடையே சிறப்பு பேருந்து வசதி உண்டு.
மேலும் விவரங்களுக்கு: 0422 - 2614580 / 94878 46601
குடும்பமாக வாருங்கள்; நண்பர்களையும் அழைத்து வாருங்கள்; ஆசீர்வாதம் பெறுங்கள்.
இணையதளம்: www.jesuscalls.org
இந்தக் கூட்டத்தை உங்கள் ஜெபத்தாலும், காணிக்கையாலும் தாங்குங்கள்.

இந்த QR Codeஐ ஸ்கேன் செய்து காணிக்கை அனுப்புங்கள்